Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, DECEMBER 30, 2021

வியாழக்கிழமை டிசெம்பர் 30, 2021 | ஒளி: 07 கதிர்: 192 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free

# ஆரம்பக் கட்டணம் ரூ.17



தனியார் பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. அது ஜனவரி 5ஆம் திகதி முதல் அமல்படுத்தப்படும் என தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் நேற்று (29) அறிவித்துள்ளது.

அதனடிப்படையில் ஆரம்பக் கட்டணம் 17 ரூபாயாகும் என்றும் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

2 வருடங்கள் பெயிலான சேருக்கு இன்னும்

# 3 வருடங்கள் வழங்க மக்கள் தயாரில்லை

## நளின் எம்.பி தெரிவிப்பு: 6 மாதங்கள் ஓடமுடியுமா என்பதில் சந்தேகம் என்கிறார்



தனக்கு இன்னும் 3 வருடங்கள் பதவிக் காலம் உள்ளதென ஜனாதிபதி தெரிவித்துள்ளமையை சுட்டிக்காட்டிய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார, அது மிகவும் நல்ல விடயம். ஆனால், முதலாவது வருடத்திலேயே அவருக்கு நாங்கள் கூறினோம் சேர் பெயில், இரண்டாவது வருடத்திலாவது பாஸாக முயற்சி செய்யுங்கள் என. ஆனால் இரண்டாவது வருடத்திலும் சேர் பெயில். எனவே, 3 வருடங்கள் குறித்து எல்லாம் எம்மால் சிந்தித்துக் கூட பார்க்க முடியாது என்றார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (29) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், சேருக்கு மேலும் 3 வருடங்களை தருவதற்கு நாட்டு மக்கள் தயாரில்லை. இன்னும் 6 மாதங்களாவது வழங்க முடியாதளவுக்கு மக்கள் பாரிய பிரச்சினையில் இருக்கின்றனர் என்றார்.

தொடர்ச்சி P2

கடனை அடைக்கத் தயார்:

# ஐ.நா ஏற்றுக்கொள்ளுமா?

## தனிநபர் போராட்டம்: தேசிய கொடியையும் ஏந்தி நின்றார்.

■ க. அகரன்



இலங்கையின் மொத்த கடனையும் தான் அடைப்பதற்கு தயார்; ஐ.நா சபை ஏற்றுக்கொள்ளுமா? என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகையை தாங்கியவாறு, வவுனியாவில் தனிநபரொருவர் கவனயீர்ப்பு போராட்டமொன்றில் ஈடுபட்டிருந்தார்.

வவுனியா நகர மணிக்கூட்டுக் கோபுர சந்தியில் நின்று, நேற்று (29) போராட்டத்தை முன்னெடுத்திருந்தார்.

தேசிய கொடியை ஏந்தியிருந்த அவர், “இலங்கையின் மொத்த கடனை அடைக்க நான் தயார்,

தொடர்ச்சி P2

# டொலர் கையிருப்பு 3.1 பில்லியன் அதிகரிப்பு



இலங்கை மத்திய வங்கியிலுள்ள வெளிநாட்டு கையிருப்பு 3.1 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளதென மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தனது டுவிட்டர் வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

ஆட்சியாளர்களுக்கு அதி போஷாக்கு;

# மக்களுக்கு மந்த போஷாக்கு

ஆட்சியாளர்களுக்கு அதி போஷாக்கும் மக்களுக்கு மந்த போஷாக்குமே இன்று உரித்தாகியுள்ளதாக, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஊட்டச்சத்தின்மை தலைவிரித்தாடும் நாடு தற்போது உருவாக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், குறைந்த நிறைகொண்ட குழந்தைகளை அதிக எண்ணிக்கையில் கொண்டிருக்கின்ற நாடு என்ற சாதனையையும் இலங்கை பெற்றுக்கொண்டுள்ளது என்றார்.



எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ மக்கள் குறையை கேட்டறியும்'மனிதாபிமான சுற்றுலா'வின் நான்காம் நாள் விஜயம், சூரியவெவ நகரில் நேற்று (29) ஆரம்பித்துவைக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

# பட்டத் திருவிழாவுக்கு அமைச்சு ஆதரவு

■ எஸ். தில்லைநாதன்



வல்வெட்டித்துறை பட்டத் திருவிழாவுக்கு, இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு முழு ஆதரவு வழங்குகிறது.

இதனடிப்படையில், ஜனவரி மாதம், இந்தத் திருவிழாவை, வல்வெட்டித்துறை சர்வதேச பட்டத் திருவிழாவாக போட்டியை முன்னெடுக்க ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவை வல்வெட்டித்துறை பட்டத் திருவிழா ஏற்பாட்டு குழுவினர், நேற்று முன்தினம் (28), கொழும்பில் சந்தித்துப் பேசினர்.

இதன்போதே, சர்வதேச பட்டத் திருவிழாவாக, வல்வெட்டித்துறை பட்டப்

தொடர்ச்சி P2

# எட்டு விபத்துகளில் குழந்தை உட்பட 8 பேர் பலி

நாட்டின் பல்வேறு பகுதிகளில் நேற்று முன்தினம் (28) இடம்பெற்ற வாகன விபத்துகள் உள்ளிட்ட பல்வேறான விபத்துகளால் மாத்திரம் எட்டுப்பேர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



# சந்திப்பு...

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை கடந்தவாரம் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இந்தச் சந்திப்பில், இந்திய பிரதமரால் உறுதியளிக்கப்பட்ட 15 மில்லியன் டொலர் மானியத்தை செயற்படுத்துதல், பௌத்த உறவுகளை மேம்படுத்துதல், யாழ்ப்பாணக் கலாசார மையத்தின் முன்னேற்றம் மற்றும் இந்தியா, இலங்கை ஆகிய இரு நாடுகளின் சுதந்திரத்தின் 75 ஆண்டுகளின் கூட்டுக் கொண்டாட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நேற்று (29) டுவிட் செய்திருந்தார்.

SPC மற்றும் TPT இணைந்து

# புதிய நிறுவனம் ஸ்தாபிக்கப்படும்



இலங்கை பெட்ரோலிய கூட்டுத்தாபனம் (SPC) உடன் இணைந்து *Trinco Petroleum Terminal Ltd* என்ற பெயரில் புதிய நிறுவனமொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

IOC நிறுவனத்துக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ள எண்ணெய் குதங்களிலிருந்து அரசாங்கத்துக்கு கிடைக்கும் பங்கினை நிர்வகிப்பதற்காக புதிய நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

உ/த மீள்திருத்த பெறுபேறு

# 31க்கு முன் வெளியாகும்

2020 ஆம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சைக்கான மீள் திருத்த பெறுபேறுகளை வெளியிடுவதற்கு பரீட்சைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதனடிப்படையில், எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் மீள் திருத்த பெறுபேறுகள் வெளியிடப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

# அரிசியின் விலை ரூ. 500ஐத் தொடும்



2022ஆம் ஆண்டில், நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும். பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்குமென எச்சரிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க, ஒரு கிலோ கிராம் அரிசியின் விலை 500 ரூபாய் வரையில் அதிகரிக்கும் என்றார். இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், நாட்டு மக்கள் பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். சுதந்திரமடைந்ததில் இருந்து நாட்டின் விவசாயத்துறை இதுபோல வீழ்ச்சியடைந்தது இல்லை. 2022ஆம் ஆண்டு பாரியளவில் உணவுத்தட்டுப்பாட்டுக்கு முகங்கொடுக்கும். அதேவேளை,

தொடர்ச்சி P2

# ஜனாதிபதி இராஜினாமா செய்தி பொய்யாகும்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தனது ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்துவிட்டார் என சமூக வலைத்தளங்களில் பரவலாக செய்திகள் நேற்று (28) வெளியாகியிருந்தன. எனினும், இந்த அறிக்கையிடல் முழுமையாக பொய்யானது என சமூக வலைத்தளங்களின் பதிவுகளை கண்காணிக்கும் factcrescendo என்ற இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது என சிங்கள இணையத்தளமொன்றின் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# ஆபாச வெளியீடுகளுக்குத் தடை



ஆபாசமான வெளியீடுகளுக்குத் தடை விதிப்பதற்கான சட்டமூலம் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானியை வலுவிழக்கச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென நீதி அமைச்சர் அலி சப்ரி, தனக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக, அந்த அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே. மாயாதுன்னே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில், ஆபாசமானதாகவுள்ள ஏதேனும் ஒன்றை வெளியிடுதல், விநியோகித்தல், விற்பனை செய்தல்,

தொடர்ச்சி P2

புலிகள் அமைப்பின் படங்களை பதிவேற்றியமை;

# மோகனின் விளக்கமறியல் 12 வரையிலும் நீடிப்பு

■ கனகராசா சரவணன்

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட மட்டக்களப்பு தமிழ் உணர்வாளர் அமைப்பின் தலைவர் கணவதிப்பிள்ளை மோகனை, எதிர்வரும் 12ஆம் திகதிவரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு, ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற மேலதிக நீதவான் கருப்பையா ஜீவராணி, நேற்று (29) உத்தரவிட்டார்.

தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பின் படங்களை இணையத்தளங்களில் பதிவு ஏற்றியமை தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் கடந்த

தொடர்ச்சி P2

# மியன்மாரில் கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்கவும்

மியன்மாரில் கைது செய்யப்பட்ட 07 இலங்கை மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை அரசாங்கத்திடம் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருகோணமலை துறைமுகத்தில் இருந்து கடந்த நவம்பர் 15 ஆம் திகதி கடற்றொழிலுக்கு சென்ற மீனவர்கள், கடந்த நவம்பர் 29 ஆம் திகதி மியன்மாரில் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீது எடுக்கப்படும் நடவடிக்கை குறித்து, இதுவரை தமக்கு அறிவிக்கவில்லையென கைது செய்யப்பட்டிருக்கும் மீனவர்களின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# 3 வருடங்கள் வழங்க மக்கள் தயாரில்லை

சேர் இப்போது சகல தவறுகளையும் அதிகாரிகளின் பக்கம் தள்ளிவிடப் பார்க்கிறார். சுற்றுநிருபங்களை கவனத்தில் எடுத்து செயற்படுமாறு அதிகாரிகளிடம் கூறிய ஜனாதிபதி இன்று அவர்களை திட்டுகிறார்.

அதிகாரிகளை திட்டுவது சிறந்த விடயமல்ல. ஆனால் மரத்தின் வேர் பலனில்லாவிட்டால் தான் முழு மரமும் சரிந்து விழும். எனவே மரத்தின் வேர் முழுமையாக செயழிலந்துள்ளதால் மரம் இப்போதா அப்போதா என முறிந்து விழுவதற்கு தயாராகவுள்ளது. எனவே கிளைகளையோ மரத்தின் பகுதிகளையோ ஜனாதிபதி திட்டவது அழகல்ல என்றார்.

எமது நாட்டின் டொலர் கையிருப்பு 3.1 பில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் டுவிட்டர் செய்தியொன்றை வெளியிட்டுள்ளார். இந்த 3.1 பில்லியன் டொலர்கள் என்னவென்று சொல்லுங்கள். கடந்த வாரம் எங்களிடம் 1.6 பில்லியன் டொலர் இருந்தது என்பதுவே எங்களுக்குத் தெரியும். ஆனால் எங்களிடம் செலவழிக்க முடியுமான டொலர் 1.1 பில்லியன் இருந்தது. மீதமுள்ளவை தங்கம் மற்றும் பிற வகையானதாகும்.3.1 பில்லியன் டொலர் இருப்பதை எவ்வாறு உள்ளன என்பதை விளக்குமாறும் அவர் கோரிநின்றார்.

# ஐ.நா ஏற்றுக்கொள்ளுமா?

இதை ஐ.நா சபை ஏற்றுக் கொள்ளுமா?, எங்களை துன்பத்தில் இருந்து காப்பாற்றுமா? இதற்கு மக்கள் நாம் ஒன்றுபடுவோம் ' எனவும் அவர் ஏந்தியிருந்த பதாகையில் சுலோகங்கள் எழுதப்பட்டிருந்தன.

இந்நிலையில், ஸ்தலத்துக்கு விரைந்த பொலிஸார், இந்த கவனயீர்ப்பு போராட்டத்தால் மணிக்கூட்டு கோபுர சந்தியில் போக்குவரத்து இடையூறு ஏற்படுகின்றது என அவருக்கு அறிவுறுத்தினர். அதனையடுத்து, பழைய பஸ் நிலையம் முன்பாக சென்ற அவர், அங்கு சிறிது நேரம் போராட்டத்தில் ஈடுபட்டதன் பின்னர் அங்கிருந்து சென்றுவிட்டார்.



# டொலர் கையிருப்பு 3.1 பில்லியன் அதிகரிப்பு



அத்துடன், அடுத்தாண்டு ஜனவரி மாத்தின் முதல் பகுதியில் மேலும் வெளிநாட்டு கையிருப்பு அதிகரிக்கும் என எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார்.

தேசிய சந்தையில் அந்நிய செலாவணி பணப்பழக்கத்தை அதிகரிக்கும் நோக்கில், மத்திய வங்கி முன்னெடுத்துள்ள வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள் பணத்தை அனுப்புவதற்கான ஊக்குவிப்பு திட்டங்களை அறிமுகப்படுத்தல், ஏற்றுமதி வருமானங்களை மீண்டும் கொண்டு வருதல்,சட்டங்களை மாற்றியமைத்தல் என்பன உத்தியோகப்பூர்வ வெளிநாட்டு கையிருப்பு அதிகரிப்புக்கு வழிவகுத்துள்ளதாக அந்தப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு, 2022ஆம் ஆண்டு முழுவதும் கையிருப்பு நல்ல நிலையில் இருக்கும் என்று எதிர்பார்ப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மக்களுக்கு மந்த போஷாக்கு

பெற்றதாகவும்,ஒரு காட்போர்ட் தேசபக்தியை உருவாக்கி, சிங்கள பௌத்த சிந்தனைகள் கணக்கில் எடுக்கப்படாது, இனவாதத்தையும் மதவாதத்தையும் தீவிரவாதத்தையும் பொய்யையும் பரப்பியது இந்த அரசாங்கமே என்றும் தெரிவித்தார்.

இரண்டு வருடங்களில் அரசாங்கம் நம் நாட்டை கண்ணீரில் மூழ்கும் ஓர் சொர்க்கமாக மாற்றிவிட்டதாகவும் மறுபுறம் இருண்ட சொர்க்கமாக மாறியுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.



# பட்டத் திருவிழாவுக்கு அமைச்சு ஆதரவு

போட்டியை முன்னெடுக்க முழு ஆதரவு வழங்குவதாக, அமைச்சர் நாமல் ராஜபக்ஷ உறுதியளித்தார்.

ஆண்டுதோறும், தைப்பொங்கல் தினத்தில் வல்வெட்டித்துறை கடற்கரையில் பட்டத் திருவிழா நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# புதிய நிறுவனம் ஸ்தாபிக்கப்படும்

குறித்த எண்ணெய் குதங்களின் ஒரு பகுதியை மீண்டும் அரசாங்கத்துக்கு பெற்றுக்கொள்வது தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெற்று வருவதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

IOC நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ள திருகோணமலையின் 99 எண்ணெய் குதங்களின் பெரும் பகுதியை மீண்டும் பெற்றுக் கொள்வது குறித்த கலந்துரையாடல் இடம்பெறுவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அரச சொத்தான Trinco Petroleum Terminal Ltd நிறுவனத்தின் கீழ் செயற்படும் எண்ணெய் குதங்கள் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தை மேலும் வலுச்சேர்ப்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என தெரிவித்த அமைச்சர் உதய கம்மன்பில, இந்த நடவடிக்கைகள் அடுத்த மாதத்திற்குள் நிறைவடையும் என்றார்.

# அரிசியின் விலை ரூ. 500 ஐ தொடும்

பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கும் முகங்கொடுக்கப்போகிறோம் என்றார்.

கடந்த ஒரு மாதமாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் சமையல் எரிவாயு அடுப்புகள் தொடர்ந்து வெடித்து வருகின்றன. குறைந்தது இதனைகூட நிறுத்த முடியாத அரசாங்கமாக தற்போதைய அரசாங்கம் இருக்கிறது எனவும் தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் பாரியளவில் அதிகரித்துள்ளன. குறிப்பாக மிளகாய் தூள், கருவாடு என்பன ஆயிரம் ரூபாய்க்கே விற்பனை செய்யப்படுகின்றன. எதிர்வரும் மாதங்களில் அவற்றின் விலைகளும் அதிகரிக்கக்கூடும் என்றார்.

நாட்டின் மொத்த சனத்தொகையில் வெறும் 10 சதவீதமானவர்களுக்குக் கூட மூவேளையும் உண்ண முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றார்.

# எட்டு விபத்துகளில்.....

அதிக வேகத்தில் பயணித்த வாகனங்கள் வேகக்கட்டுப்பாட்டை இழந்தமையால் நேற்று முன்தினம் அதிகளவான விபத்துகள் பதிவாகியுள்ளன.

### ட்ரக்டர் விபத்து

கிரிபாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தம்மென்னாவ மெதகம வீதியில் சிறிய ட்ரக்டர் ஒன்று விபத்துக்குள்ளானதில், காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 20 வயதான சாரதி உயிரிழந்துள்ளார்.

### ஓட்டோ விபத்து

புளத்சிங்கள பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஓட்டோ வேகக் கட்டுப்பாட்டை இழந்து கால்வாயில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில், ஓட்டோவின் பின் ஆசனத்தில் அமர்ந்து பயணித்த நபர் உயிரிழந்துள்ளார்.

### மோட்டார் சைக்கிள் விபத்து

கம்பஹாவில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியோரத்திலிருந்த மின்கம்பத்தில் மோதியதில் பலத்த காயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதி உயிரிழந்துள்ளார்.

### மோட்டார் சைக்கிள் விபத்து

காலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எடமுல சந்தியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்களில் பின்புறம் அமர்ந்து பயணித்த நபர் ஆற்றில் விழுந்து உயிரிழந்துள்ளார்.

### இரண்டு வயது பிள்ளை பலி

கல்முனையில் இருந்து அட்டாளச்சேனை நோக்கிப் பயணித்த கெப் ரக வாகனமொன்று மோதி 02 வயது பிள்ளை உயிரிழந்துள்ளது.

### பாதையில் சென்றவர் பலி

பிலியந்தல - ஹொரண கொழும்பு பிரதான வீதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த ஜீப் ரக வாகனமொன்று மோதியதில் வீதியில் பயணித்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

### லொறியில் மோதி விபத்து

கண்டி - யாழ்ப்பாணம் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி ஒன்றின் மீது வேகக் கட்டுப்பாட்டை இழந்த ஓட்டோ ஒன்று மோதியதில், ஓட்டோவில் பயணித்த பெண் உயிரிழந்துள்ளார்.

### கல்குவாரியில் விபத்து

மத்தல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கெடன்வெவ கல்குவாரியில் கல் அரைக்கும் இயந்திரத்தை பொருத்திக்கொண்டிருந்த நபர் மீது பாரிய இரும்பு துண்டொன்று வீழ்ந்துள்ளது. அதில் பலத்த காயமடைந்த நபர் ஹம்பாந்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

# ஆபாசமான வெளியீடுகளுக்கு தடை

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்தல் என்பவற்றை தடை செய்ய வேண்டுமென தன்னார்வ தரப்பினர் நீதி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

மேலும், ஆபாசமான வெளியீடுகள் கட்டளைச் சட்டத்தை நீக்குவதற்குமான சட்டமூலம் தொடர்பிலும் தன்னார்வலர்கள் கோரிக்கை விடுத்திருந்ததாகவும், இந்தக் கோரிக்கையை நீதி அமைச்சர் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், சிவில் அமைப்புகள், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரிடம் கருத்துகளை கேட்டறிந்ததன் பின்னர், இத்திருத்த சட்டமூலத்தை அமைச்சரவையில் மீள சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு தனக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் சிறுவர்களுக்கு எதிரான துன்புறுத்தல்களை தடுப்பதற்கும், பெண்களின் தனிப்பட்ட விடயங்களைப் பாதுகாப்பதற்குமே இச்சட்டத்தை கொண்டுவர எதிர்பார்க்கப்படுவதாகவும், இதனால் பேச்சு சுதந்திரத்துக்கு எந்தவிதமானப் பாதிப்புக்களும் வராது எனவும் நீதி அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மியன்மாரில் கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்கவும்

இதுகுறித்து கடற்றொழில் திணைக்களத்திடம் வினவியபோது, மியன்மாரின் தற்போதைய இராணுவ ஆட்சியாளர்கள், நாட்டின் கடல் எல்லைக்குள் பிரவேசிப்பவர்களுக்கு எதிராக கடுமையான சட்டத்தை அமல்படுத்தி வருவதாக திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

எனினும், இலங்கை மீனவர்களை மீட்பதற்கு வெளிவிவகார அமைச்சின் ஊடாக சாத்தியமான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

# ஜனாதிபதி இராஜினாமா செய்தி பொய்யாகும்

ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் கிங்சிலி ரத்னாயக்கவும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஜனாதிபதி இராஜினாமா? என்ற செய்தி முற்றுமுழுதும் பொய்யானது எனத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியால் எதிர்காலங்களில் எடுக்கப்படும் தீர்மானங்கள், அவருடைய உத்தியோகபூர்வ சமூக வலைத்தளங்களின் ஊடாக அறிவிக்கப்படும் என்றும் கிங்சிலி ரத்னாயக்க தெரிவித்துள்ளார் என அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி பதவிக்கு நியமிக்கப்படும் முறைமை, அந்த பதவியிலிருந்து நீக்கும் முறை என்பன தொடர்பில் அரசியலமைப்பில் மிகத் தெளிவாக குறிப்பிடப்பட்டள்ளது என்றும் சிங்சிலி ரத்னாயக்க தெரிவித்துள்ளார் என அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மோகனின் விளக்கமறியல் 12 வரையிலும் நீடிப்பு

மே மாதம் 3ஆம் திகதி ஏறாவூர் பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு அழைக்கப்பட்ட அவர், அன்றைய நாளே பொலிஸ் நிலையத்தில் வைத்து பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் ஏறாவூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவரை, ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதையடுத்து, அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்நிலையில், கொரோனா தொற்றுக் காரணமாக நீதிமன்றத்துக்கு அழைத்துவரமுடியாத காரணத்தால் காணொளி மூலம் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற மேலதிக நீதவான் கருப்பையா ஜீவராணி முன்னிலையில் வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது, எதிர்வரும் 12ஆம் திகதி வரை அவரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

அரசாங்கத்துக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில்

# பிளவை ஏற்படுத்த முயற்சி

முஸ்லிம் நாடுகள் அரசாங்கத்துக்கு உதவுவதில்லை எனக் கூறி முஸ்லிம்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் பிளவுகளை ஏற்படுத்த எதிர்க்கட்சி முயற்சிக்கிறதெனத் தெரிவிக்கும் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, எதிர்க்கட்சியின் பிரசாரங்கள் அனைத்தும் பொய்யாக்கப்பட்டுள்ளன எனவும் கூறினார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், கிராமங்களுக்குச் சென்றால் ஆளுந்தரப்பினருக்கு எதிராக மக்கள் கூக்குரல் போடுவார்கள் என எதிர்க்கட்சியினர் பிரசாரங்கள் செய்தனர். அது பொய். ஒரு பொய்யைக் கூட, சொல்ல முடியாத அளவுக்கு எதிர்க்கட்சிகள் திணறுகின்றன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த நாட்டின் பாதுகாப்பை சிறந்த முறையில் உறுதிப்படுத்தியுள்ளார். ஜனாதிபதி தலைமையிலான எமது




அரசாங்கம், இந்நாட்டில் வாழும் சிங்கள, முஸ்லிம், தமிழ், பேகர் என அனைத்து சமூகத்தினருக்கும் பாதுகாப்பை உறுதி செய்துள்ளது. இந்த நாடு பாதுகாப்பற்ற நாடாக மாற ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். உலக வங்கி எங்களுக்கு உதவவில்லை என்று நினைக்கிறார்கள். வீதிகளை அமைக்க உலக வங்கி 500 மில்லியன் டொலரை வழங்கியது. மேலும் வீதிகள் அமைக்க சவுதி நிதி வழங்கியுள்ளது. முஸ்லிம்களுக்கும் எங்களுக்கும் இடையில் பிளவை ஏற்படுத்த எதிர்க்கட்சிகள் முயற்சிக்கின்றன என்றார்.

# மட்டக்களப்பு மாவட்ட தொழில் நிபுணர்களுடன் ஜீ.எல் சந்திப்பு



வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ் மற்றும் தொழில் வல்லுநர்களுக்கு இடையிலான சிநேகபூர்வமான சந்திப்பொன்று மட்டக்களப்பில் நேற்று முன்தினம் (28) நடைபெற்றது.

இச்சந்திப்பில் மருத்துவர்கள், பொறியியலாளர்கள் உள்ளிட்ட வல்லுநர்கள் கலந்து கொண்டனர். கலந்துரையாடலின் போது, அரசியலமைப்பு சீர்திருத்தங்கள், தேர்தல் சீர்திருத்தங்கள், கல்வி சீர்திருத்தங்கள், நாட்டின் சமூக அரசியல் வெளியுறவுக் கொள்கை, வெளிநாட்டு உறவுகள் குறித்தும் தற்போதைய பொருளாதார நிலை மற்றும் அதன் மேம்பாடு குறித்தும் ஆழமாகக் கலந்துரையாடப்பட்டது.

விமான விபத்து:

# முழுமையான விசாரணைக்கு குழு நியமனம்

நீர்கொழும்பு - கட்டான பகுதியில் சிறிய விமானமொன்று விபத்துக்குள்ளான சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க குழு நியமிக்கப்பட்டுள்ளது.

சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் இக்குழு நியமிக்கப்பட்டுள்ளதாக அந்த அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் கெப்டன் தேமிய அபேவிக்ரம தெரிவித்துள்ளார்.

இதேவேளை விபத்துக்குள்ளான விமானம் இரத்மலானை விமான நிலையத்தில் இருந்து பயணத்தை ஆரம்பித்ததிலிருந்து அந்த விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டது வரையில் இக்குழு முழுமையாக ஆராய உள்ளது.

இதேவேளை விபத்து இடம்பெற்ற பகுதி கண்காணிக்கப்பட்டு வருவதாகவும், தகவல்கள் பதிவு செய்யப்பட்டு வருவதாகவும் மற்றுமோர் அதிகாரிகள் குழு, நிறுவனத்தின் தலைமை அலுவலக அதிகாரிகளிடம் வாக்குமூலம் பதிவு செய்து வருவதுடன், ஆவணங்களையும் ஆய்வு செய்து வருவதாக பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.




# தவறிழைப்பவர்களை ஜனாதிபதி தண்டிப்பதில்லை

தவறிழைத்த அதிகாரிகள் எவரையும் ஜனாதிபதி தண்டிப்பதில்லை எனத் தெரிவிக்கும் ஓமல்பே சோபித தேரர், தவறிழைப்பவர்களை ஜனாதிபதி விரைவாகத் தண்டிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், நாட்டில் இடம்பெறும் அனைத்துத் தவறுகளுக்கும், ஜனாதிபதி அதிகாரிகளையே குற்றம்சுமத்துகிறார்கள். அதிகாரிகள் தவறு செய்தால் அவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும்.

நாட்டு மக்கள் கண்ணீரில் வாழும் நிலை ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதியிடம் நான் நேரடியாகவே கேட்கிறேன். தவறிழைத்த எத்தனை அதிகாரிகளை நீங்கள் தண்டித்துள்ளீர்கள்?

காஸ் அடுப்புகள் வெடிக்கின்றன. சீனி, பால்மா உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் தவறுகள் இடம்பெற்றுள்ளன. இராஜாங்க அமைச்சர்கள், அமைச்சர்களின் ஆலோசனைகளுக்கு அமைவாகவே



இத்தவறுகள் இடம்பெற்றுள்ளன என்றார்கள்.

இவர்களை ஜனாதிபதி தண்டித்தாரா? இல்லை. தவறிழைப்பவர்களை தண்டிப்பது, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் கடமை. எனவே தவறிழைத்த அதிகாரிகள் உள்ளிட்டவர்களுக்கு விரைவாக ஜனாதிபதி தண்டனை வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.




# ஆய்வு கையளிப்பு

இலங்கையிலுள்ள பெண் ஊடகவியலாளர்கள் மற்றும் பெண் செயற்பாட்டாளர்களுக்கான டிஜிட்டல் பாதுகாப்பு தொடர்பான செயற்றிட்டத்தில் பங்கேற்ற ஊடகவியலாளர்களான கலாவர்ஷ்னி கனகரட்ணம், சாரா பத்திரண ஆகியோர் ஊவா மாகாணத்தின் பெண் செயற்பாட்டாளர்களை மையமாகக்கொண்டு டிஜிட்டல் பாதுகாப்பு தொடர்பான ஆய்வொன்றை மேற்கொண்டனர். குறித்த ஆய்வின் அறிக்கை மூன்று மொழிகளிலும் பதுளை ஊவா சக்தி அமைப்பின் தலைவர் சுரேஷ் நடேசனிடம் கையளிக்கப்பட்டது.

# அகில இலங்கை சமாதான நீதவான்



மன்னார், எருக்கலம்பிட்டி கிராமத்தை பிறப்பிடமாகவும், தற்பொழுது புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நாகவில்லு கிராமத்திலும் வசித்து வரும் ராசிக் முஹம்மது றிஸ்லி, அகில இலங்கை சமாதான நீதவானாக வியாழக்கிழமை (23) புத்தளம் நீதவான் நீதிமன்றத்தின் மேலதிக மாவட்ட நீதவான் ஏ.எஸ்.அசேல த சில்வா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

2013ஆம் ஆண்டு மன்னார் மாவட்டத்தின் நானாட்டான் பிரதேச செயலகத்திலும், தற்பொழுது சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் தலைமைக் காரியாலத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றி வரும் இவர், எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த அல்ஹாஜ் மீராசாஹிபு முஹம்மது ராசிக், அல்ஹாஜ் ராசிக் சகுதூனா ஆகியோரின் இளைய புதல்வராவார்.

# அரசாங்கம் விலக வேண்டும்

அத்தியாவசிய பொருட்களின் விலைகள் விண்ணைத் தொடுகின்றன. எனவே, அரசாங்கம் ஆட்சியிலிருந்து விலக வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ஹலீம் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், முறைமை மாற்றம் ஒன்று எல்லா துறைகளிலும் இடம்பெற்றுள்ளது. எல்லா இடங்களிலும் காஸ் அடுப்பு வெடிக்கிறது. எரிபொருள், அத்தியாவசிய பொருள்களின் விலைகள் விண்ணை தொடுமளவு அதிகரித்துள்ளன.

நாட்டு மக்களுக்கு அரசாங்கம் துரோகம் செய்கிறது. அரசாங்கத்தை



தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை என்றால், அரசாங்கம் ஆட்சியிலிருந்து விலக வேண்டும் எனவும் அவர் கூறினார்.

# மூவரும் அமைச்சுகளை துறக்க வேண்டும்

அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோர் யுகதனவி மின் உற்பத்தி நிலையம் தொடர்பில் உண்மையை பேசுபவர்களாக இருந்தால், அவர்கள் மூவரும் அமைச்சுப் பதவிகளை துறந்து வெளியில் வரவேண்டும் என தேசிய மக்கள் சக்தி கோரியுள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் ஜயதிஸ்ஸ, ஜனாதிபதியின் கொள்கைளுக்கு அமைய அமைச்சரவையில் எவரும் செயற்படவில்லை என்றால், அவர்களின் பதவிகளை ஜனாதிபதி பறிக்க வேண்டும்.

எவ்வாறாயினும் ஜனாதிபதி எந்தவோர் அமைச்சரையும் அமைச்சுப் பதவியிலிருந்து நீக்க போவதில்லை. அதேபோல அரசாங்கத்தை விமர்சிக்கும் அமைச்சர்கள் எவரும் பதவிகளில் இருந்து



விலகப்போவதுமில்லை.

மேலும், வாசு, விமல், கம்மன்பில ஆகியோர் யுகதனவி மின்உற்பத்தி நிலையம் தொடர்பில் உண்மை பேசுபவர்களாக இருந்தால், அமைச்சுப் பதவிகளை துறந்து, அவர்களாகவே வெளியில் வர வேண்டும் என்றார்.

# அரிய வகை எறும்புத்தின்னி

■ எம்.யூ.எம்.சனூன்

புத்தளம், முந்தல் பகுதியிலுள்ள வீடொன்றின் முற்றத்தில் அரிய வகை எறும்புத்தின்னி அப்பகுதி மக்களால் நேற்று முன்தினம் (28) உயிருடன் பிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பொது மக்கள் புத்தளம் வனஜீவராசிகள் கட்டுப்பாட்டுப் பிரிவினருக்குத் தகவல் வழங்கியதை அடுத்து, குறித்த இடத்துக்கு விஜயம் செய்த வனஜீவராசிகள் திணைக்கள கட்டுப்பாட்டுப் பிரிவினர் எறும்புத்தின்னியை உயிருடன் மீட்டு வில்பத்து சரணாலயத்தில் விடுவித்துள்ளனர்.



இந்த உயிரினமான எறும்புத்தின்னி எதிரிகளைக் கண்டால் உடலை பந்து போன்று சுருட்டி வைத்துக் கொண்டு தம்மைக் காத்துக் கொள்ளும் எனவும்,

இந்த உயிரினம் இலங்கையில் அழிவடைந்து வருகிறது என்றும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

# பல்கலைக்கழக விரிவுரைகளுக்கு அனுமதி

சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களைப் பின்பற்றி, 50 சதவீதமான மாணவர்களுடன் விரிவுரைகள் உள்ளிட்ட செயற்பாடுகளை மேற்கொள்ள பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்கவே மேற்கண்டவாறு அறிவித்துள்ளதோடு, பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்கத் தேவையான நடைமுறைகளை முன்னெடுக்குமாறும் துணை வேந்தர்களுக்கு அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போதே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்

# இருவருக்கு பேராசிரியர் நியமனம்





யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் மேலும் இரண்டு பேருக்குப் பேராசிரியர் பதவியை வழங்குவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை ஒப்புதல் அளித்துள்ளது.

பகிரங்க விளம்பரத்துக்கமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்காக விண்ணப்பித்த யாழ். போதனா வைத்தியசாலை உளநல மருத்துவ நிபுணர் எஸ். சிவயோகன், உளநலப் பேராசியராகவும்,

திறமை அடிப்படையிலான உள்ளகப் பதவியுயர்வுக்காக விண்ணப்பித்திருந்த இரசாயனவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கணேசலிங்கம் சசிகேஸ், இரசாயனவியலில் பேராசிரியராகவும் பதவி வழங்கப்படுவதற்கே பேரவை ஒப்புதல் அளித்துள்ளது.

யாழ். பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்த கூட்டம் நேற்று (29) ஆம் திகதி புதன்கிழமை, துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெற்றது. பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்று நிருபங்களுக்கமைவான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்து நேர்முகத் தேர்விலும் சித்தியடைந்த கலாநிதி க.சசிகேஸ், உளநல மருத்துவ நிபுணர் எஸ். சிவயோகன் ஆகியோரின் பதவியுயர்வுக் குறிப்புகள் வழங்கப்பட்டன.

முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களின்

# உரிமைகள் மறுப்பு

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

■ எம்.எஸ்.எம். ஹனீபா



வவுணதீவு பிரதேச சபை தவிசாளருக்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய காரியாலயத்தில் நேற்று (29) முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக, அனைத்து முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் தொழிற் சங்கத்தின் தலைவர் ஏ.ஜீ.முபாறக் தெரிவித்தார்.

சுற்றுநிருபங்கள் மூலமும் வர்த்தமானி அறிவித்தல்கள் மூலமும், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்கு உறுதிப்படுத்தப்பட்ட, கடமைப் பொறுப்புகளை, வேறு சேவையை சேர்ந்தவர்களுக்கு தவிசாளர் வழங்கியுள்ளதாகவும் அம் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரச சுற்றுநிருபங்களையும் வர்த்தமானி அறிவித்தல்களையும் உதாசீனம் செய்துள்ளதாகவும், இவ்வாறு செய்கின்றமையானது, அரசின் உத்தியோகபூர்வ கட்டளைகளுக்கு முரணாக செயற்பட்டு, அரச சேவையை அவமதித்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான பல முறைப்பாடுகளை, மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நாங்கள் செய்து, தீர்வைப் பெற்றுள்ளோம் என்றும் அனைத்து முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் தொழிற் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.

சங்கத்தின் தலைவர், ஏ.ஜீ. முபாறக், செயலாளர் நாயகம் வ.பற்குணன், அதியுயர்பீட உறுப்பினர் எம்.எம்.எம். பைஸ் ஆகியோர் சென்று குறித்த முறைப்பாட்டைக் கையளித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

பருத்தித்துறை துறைமுக அபிவிருத்தி உரிமைக்கு

# கடும் போட்டி

■ எஸ். தில்லைநாதன்



பருத்தித்துறை மீன்பிடி துறைமுக அபிவிருத்திக்கான உரிமையை பெறுவதில் இந்தியா, சீனா ஆகிய நாடுகளுக்கு இடையே கடும் போட்டி ஏற்பட்டுள்ளது.

இந்த இரு நாடுகளும் கடற்றொழில் அமைச்சிடம் தமது விருப்பங்களைத் தெரிவித்துள்ளன.

இதேசமயம், கிளிநொச்சி - பூநகரி, கௌதாரிமுனையில் கடலட்டை பண்ணை வளர்ப்பில் சீனா ஈடுபட்டுள்ளது. இந்த நிலையில், அங்கு மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி வளத் திட்டம் ஒன்றை செயற்படுத்த இந்தியா முயன்று வருகின்றது.

இதற்காக இந்தியாவுக்கு காணி வழங்கப்பட்டதா என்பது தொடர்பில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம், கிளிநொச்சியில் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பிய வேளை, அவ்வாறு காணி வழங்கப்படவில்லை என்று தெரிவித்த அவர், அபிவிருத்திக்கு எம்மிடம் நிதியில்லை. எனவே, வெளிநாடுகள் வரும்போது அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறினார்.

இதனிடையே, ஆசிய அபிவிருத்தி வங்கி, 1,260 கோடி ரூபாய் செலவில் அமைக்க முன்வந்த பருத்தித்துறை துறைமுக நகரத் திட்டத்தை செயற்படுத்த, இந்தியாவும் சீனாவும் இப்போது போட்டியிடுகின்றன. பருத்தித்துறை துறைமுக அபிவிருத்திக்கு இந்தியாவுக்கே முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் கூறினார்.

அண்மையில், யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த சீனத் தூதுவர் கியூ சென் ஹொங் பருத்தித்துறை துறைமுகத்தையும் சென்று பார்வையிட்டார்.

அத்துடன், இங்கிருந்து இந்தியா எவ்வளவு தூரம் என்று கேள்வி எழுப்பியமையும், மன்னார் இராமர் பாலத்தில், "இது முடிவல்ல ஆரம்பமும்கூட" என்று கருத்து வெளியிட்டமையும் இந்திய, சீனா மூலோபாய போட்டி, வடக்கிலும் மையம் கொள்ள ஆரம்பித்து விட்டதாக, அரசியல் விமர்சகர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ரயில் மோதி

# இளம் குடும்பஸ்தர் பலி

■ பேரின்பராஜா சபேஷ்



மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயில் மோதியதில் ஆறுமுகத்தான் குடியிருப்பு பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான ரட்னகுமார் டினேஷ்ராஜ் (வயது 29) எனும் இளம் குடும்பஸ்தர், நேற்று முன்தினம் (29) உயிரிழந்துள்ளார்.

மேசன் தொழிலாளியான இவர், தனது உறவினர் ஒருவரை சந்திப்பதற்காக இரவு 8.30 மணியளவில் ரயில் பாதையைக் கடக்கும் போது, ரயிலில் மோதி உயிரிழந்ததாக தெரியவருகின்றது.

திடீர் மரண விசாரணையதிகாரி எம்.எஸ்.எம். நசிர் சம்பவ இடத்துக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டு, விசாரணைகளை மேற்கொண்டார்.

மரணித்தவரின் குடும்ப உறவினர்களிடம் ஏறாவூர்ப் பொலிஸார் வாக்குமூலம் பதிவுசெய்துள்ளனர்.

மஜ்மா நகரில்

# கொரோனா சடலங்கள் 3,297 நல்லடக்கம்

■ எச்.எம்.எம்.பர்ஸான்

கொரோனா தொற்றின் மூலம் மரணிக்கும் நபர்களை நல்லடக்கம் செய்யும் ஓட்டமாவடி, மஜ்மா நகர் மையவாடியில் நேற்று முன்தினம் (28) வரை 3,297 சடலங்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன.

குறித்த மையவாடிக்கு தற்போது நாளொன்றிற்கு 1 முதல் 2 வரையான உடலங்கள் மாத்திரமே நல்லடக்கம் செய்வதற்கு கொண்டு வரப்படுகின்றன.

அதேவேளை, மரணித்தவர்களின் உறவினர்கள், மையவாடிக்குச் சென்று பிரார்த்தனைகளில் ஈடுபட கடும் நிபந்தனைகளுடன் ஓட்டமாவடி பிரதேச சபை அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.









# கடமையேற்பு

கிளிநொச்சி, பூநகரி நிலையத்துக்கான புதிய பொலிஸ் பொறுப்பதிகாரியாக ஐ.பி.என் இகின் ஆசிறி, நேற்று (29), தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். இவர், கொழும்பு, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் பொலிஸ் பரிசோதகராக கடமையாற்றி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

(படப்பிடிப்பு: சுப்பிரமணியம் பாஸ்கரன்)

# அரங்க கதையாடல்

■ எஸ்.குகன்

புத்தாக்க அரங்க இயக்கம் நடத்தும் மெய்நிகர் இணையவழி பன்னாட்டு அரங்க கதையாடல் தொடர் 11ஆவது நிகழ்வு, 2,3,4,5,6ஆம் திகதிகளில், இரவு 7 மணிக்கு, புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, கலைஞானச்சுடர் சுபாஷினி பிரணவன் 'வாழ்விலும் நாடகமும்', 3ஆம் திகதி திங்கட்கிழமை, 'திருமறைக் கலாமன்ற ஒப்பனைக் கலைஞர் அன்று யூலியஸின் நாடகத்தில் ஒப்பனையின் வகிபங்கு', 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதல்வர் வீ.கருணலிங்கம், 'கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பாரம்பரிய நாடகங்களின் ஆற்றுகையும் பேணுகையும்', 5ஆம் திகதி புதன்கிழமை, புதுடெல்லி தேசிய நாடகப்பள்ளி பேராசிரியர் கே.எஸ். ராஜேந்திரன், 'இந்திய அரங்கும் தமிழ் அரங்கும் சமகாலப் போக்கும்', 6ஆம் திகதி, கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் வீ. கே.ரவிச்சந்திரன், 'கிழக்கு இலங்கை சூழலில் உள்ள பிரதிகளற்ற நவீன நாடகங்கள்' ஆகிய விடயங்களில் கதையாடவுள்ளார்கள்.

நிறைவுரையினை புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.ரி.அருள்குமரன் வழங்கவுள்ளார்.

இந்த இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 647334 8261, கடவுச்சொல் ITM ஊடாக இணைந்து கொள்ளுமாறு, புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

பாக்கியராசாவின்


# 'வளம்மிகு மண்டூர்'

## நூல் அரங்கேற்றம்

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் வெளியீடான முதுநிலை ஊடகவியலாளர் இ.பாக்கியராசாவின் 'வளம்மிகு மண்டூர்' நூல் அரங்கேற்றம், கல்லடியிலுள்ள கிழக்குப் பல்கலைக்கழக, சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவக மண்டபத்தில், ஜனவரி மாதம் 2ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மேற்படி ஒன்றியத்தின் ஏற்பாட்டில், பேராசிரியர் ப. சந்திரசேகரம் அரங்கில், பேராசிரியர் செ. யோகராசா தலைமையில் நடைபெறவிருக்கும் இந்நிகழ்வில், மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷஜானந்தா ஆன்மீக அதிதியாக கலந்துகொள்ளவுள்ளார்.

கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் வைத்திய நிபுணர் வே.விவேகானந்தராசா பிரதம விருந்தினராகவும் போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் செல்வி இ.இராகுலநாயகி சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.




# கூட்டு சமஷ்டியே நிரந்தர தீர்வு



■ எஸ். தில்லைநாதன்

தமிழ் மக்களுக்கான பூரணமான இறுதித் தீர்வு, சர்வதேச சமூகத்தால் நடத்தப்படும் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் ஊடாகவே நடைபெற வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும் என பாராளுமன்ற உறுப்பினர் சி. வி. விக்னேஸ்வரன் எம். பி. குறிப்பிட்டுள்ளார்.

ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்கு பதில் அளிக்கும் முகமாக, நேற்று முன்தினம் (28), அவர் அனுப்பி வைத்த பதிலிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில், தங்களுடன் சேர்ந்து பல தமிழ்க் கட்சிகள் அண்மையில் கூடி 13ஆவது திருத்த சட்டத்தை அமல்படுத்துவதற்கு இந்தியாவை வலியுறுத்துவதற்கு எடுத்த தீர்மானத்துக்கும் தமது அரசியல் தீர்வுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது எமக்கு நாம் விரும்பும் ஒரு தீர்வைப் பெற்றுக்கொள்ளும் காலம் கனிந்துவிட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் 13ஆவது திருத்த சட்டத்தை, இதனால்தான் வலியுறுத்துகின்றோம் என்பது போலவும் உண்மைக்கு மாறான கருத்துகள் கூறப்பட்டு வருகின்றன எனவும், அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அன்றே, நாம் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமல்படுத்துவதற்கு ஒற்றுமையுடன் நடவடிக்கை எடுத்து இருந்தால், இன்று மிகவும் பலமான ஒரு நிலையில் இருந்திருப்போம். அந்த நிலையில் நின்று கொண்டு எமது நிரந்தரத் தீர்வுக்காகப் போராடியிருப்போம். ஆனால், இன்று எமது நிலை மிகவும் வருத்தத்துக்கு உரியதாக மாறியுள்ளது எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், தீர்வுக்கான எமது நடவடிக்கைகளும் ஒற்றையாட்சியின் கீழ் 13 ஆவது திருத்த சட்டத்தை அமல்படுத்துவதற்கான எமது முயற்சிகளும் வெவ்வேறானவை. அவை சாமாந்திரமானவை; ஒருபோதும் ஒன்றுடன் ஒன்று சந்திக்க முடியாதவை.

தமிழ் மக்களுக்கான பூரணமான இறுதித் தீர்வு சர்வதேச சமூகத்தால் நடத்தப்படும் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் ஊடாகவே நடைபெற வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. தமிழ் கட்சிகள் காலம் காலமாக சமஷ்டியை ஒரு தீர்வாக வலியுறுத்தி வருகின்றன. கூட்டு சமஷ்டியே நிரந்தரத் தீர்வாக அமைய முடியும் என்பது எமது கூட்டணியின் நிலைப்பாடு. இதனை நாம் தீர்மானிக்க முடியாது. எமது மக்களே தீர்மானிக்க வேண்டும்.

அதனால்தான் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கு நாம் கோரிக்கை முன்வைத்திருக்கின்றோம். இதனை இந்தியாவிடமும் நாம் வலியுறுத்தி உள்ளோம்; மீண்டும் வலியுறுத்துவோம். ஆனால், சர்வஜன வாக்கெடுப்பு இன்று நடக்கும், நாளை நடக்கும் என்று எதிர்பார்த்திருந்து எமது நிலத்தையும் மக்களையும் நாம் இழந்துவிடக்கூடாது.

ஆகவே, ஏற்கெனவே இருக்கும் 13ஆவது திருத்தச் சட்டத்தை அமல்படுத்தி, சில வலுவூட்டும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள நாம் நடவடிக்கை எடுக்க முன்வந்துள்ளோம் எனவும், அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மூதூரில்

# டெங்கு அதிகரிப்பு

■ தீஷான் அஹமட்

மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் டெங்கு தொற்றாளர்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருவதால் பொதுமக்கள் தங்களது வீடுகளையும் சுற்றுச் சூழலையும் சுத்தமாக வைத்திருக்குமாறு, மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி ஹில்மி முகைதீன் கேட்டுக்கொண்டுள்ளார்.

அத்தோடு, தமது சுகாதார பரிசோதகர்கள், பிரதேசத்தில் உள்ள வீடுகளுக்குச் சென்று சோதனையிட்டபோது, டெங்குக் காய்சலை ஏற்படுத்தும் நுளம்பு குடம்பிகளை பல வீடுகளிலிருந்து கண்டறிந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 2020ஆம் ஆண்டு மாத்திரம் 452 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டிருந்தனர்.

2021ஆம் ஆண்டு ஆரம்பம் முதல் நேற்று (29) வரை 111 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இம்மாதம் மாத்திரம் 63 டெங்கு நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளதாகவும், இதனால் டெங்கு தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்குமாறும் சுகாதார வைத்திய அதிகாரி மேலும் கேட்டுக்கொண்டுள்ளார்.



போதையில் இருந்த

# பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் பணி நீக்கம்



■ எம்.றொசாந்த்

கடமையின் போது போதையில் காணப்பட்ட இரு பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொடிகாமம் பொலிஸ் நிலையத்தை சேர்ந்த இரு பொலிஸ் உத்தியோகஸ்தர்களே, இவ்வாறு பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இருவரும், நேற்று முன்தினம் (28) நண்பகல், கொடிகாமம் பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது மேற்கொள்ளப்பட்ட விசேட பொலிஸ் பரிசோதனையில் அவ்விவரும் மதுபோதையில் இருந்தமை தெரியவந்துள்ளது.

இதையடுத்து, குறித்த இருவரிடமும் சாவகச்சேரி பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் விசேட விசாரணை மேற்கொள்ளப்பட்டதில், குற்றம் உறுதியான நிலையில், குறித்த இருவரும் மறுஅறிவித்தல் வரை பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

பல்நோக்கு அபிவிருத்தி

# செயலணியின் மீளாய்வுக் கூட்டம்

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன்



பல்நோக்கு அபிவிருத்திச் செயலணி திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட செயற்பாடுகள், முன்னேற்றங்கள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம், மாவட்டச் செயலகத்தில் நேற்று (29) நடைபெற்றது.

உதவி மாவட்ட செயலாளர் எஸ். நவேஸ்வரன் தலைமையில், பல்நோக்கு அபிவிருத்திச் செயலணித் திணைக்களத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளர் மேஜர். கே.பீ கமகேவின் எற்பாட்டில் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதில் மாவட்ட, பிரதேச செயலக ரீதியாக இத் திணைக்களத்துக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

சிவனடியைத் தரிசிக்கச் சென்ற

# 52 பேர் கைது

■ சுதத்.எச்.எம்.ஹேவா

சிவனொளிபாதமலை யாத்திரைக் காலம் ஆரம்பமாகி 10 நாள்கள் கடந்துள்ள நிலையில், குறித்த யாத்திரைக்கு போதைப் பொருட்களுடன் சென்ற 52 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என ஹட்டன் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி விஜித்த டீ சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த மாதம் 18ஆம் திகதி ஆரம்பமான குறித்த யாத்திரைக் காலம் ஆரம்பமான நிலையில், ஹட்டன் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மூலம் 52 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதில் அதிகமானவர்கள் ஹட்டன்- கொழும்பு வீதியில் வைத்தே கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் மோப்ப நாயின் உதவியுடனேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்ப ட்டவர்களுள் அதிகமானவர்கள் 20- 30 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்றும் இவர்கள் அனைவரும் ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

தீப்பரவல் ஏற்பட்டு இரண்டு வருடங்கள் கடந்தும்

# தற்காலிக குடிசைகளே நிரந்தரமாகின

■ நிலமேகம் பிரசாந்த்

கொட்டகலை பிரதேச சபைக்குட்பட்ட ஹெலிரூட் கிழக்கில் உள்ள தொடர் குடியிருப்புகளில் ஒன்று தீப்பரவலுக்கு உள்ளாகி, இரண்டு வருடங்கள் கடந்தும், இதுவரை பாதிக்கப்பட்டவர்களுக்கு மாற்று குடியிருப்புகள் அமைத்து கொடுக்கப்படாமையால், பாதிக்கப்பட்டவர்கள் தற்காலிக கூடாரங்களிலும், தோட்ட கலாசார மண்டபத்திலும் தங்கியிருக்கின்ற அவல நிலை ஏற்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு, மே மாதம் குறித்த தீப்பரவல் ஏற்பட்டதுடன், இதன்போது நான்கு வீடுகள் தீக்கிரையாகின. இச்சம்பவம் இடம்பெற்ற சில மணிநேரத்துக்குள் அனைத்து அரசியல்வாதிகளும் மக்களை சந்தித்துள்ளனர்.

இதன்போது, பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடுகளை அமைக்க முன்னாள் அமைச்சர் பழனி திகாம்பரம் காணியை ஒதுக்கி, வீடுகள் கட்டுவதற்கான அடிக்கல்லை நாட்டிய போது, ஐம்பத்திரெண்டு நாள் அரசாங்கம் மாற்றப்பட்டதால் அத்திட்டம் கைவிடப்பட்டது.

பின்னர் முழுமையாக அத்திட்டம் கைவிடப்பட்ட நிலையில், தோட்ட மக்கள் இணைந்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு தற்காலிக கூடாரங்களை அமைத்துக் கொடுத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில், இவ்வருடம் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, காணி ஒதுக்கப்பட்ட இடத்தில் வீடுகளை அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் இன்று வரை, சுவர்கள் மாத்திரம் ஏற்றப்பட்ட நிலையில் உள்ளன.

எனவே, தற்காலிக குடிசைகளிலும் கலாசார மண்டபத்திலும் தங்கியிருக்கும் தமக்கு, விரைவாக நிரந்தர வீடுகளை அமைத்து தருமாறு பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.





சீனித் தொழிற்சாலையிலிருந்து

# உர மூட்டைகள் திருடப்பட்டன

■ சுமணசிறி குணதிலக

இலங்கை சீனி நிறுவனத்துக்குரிய பெல்வத்த சீனி தொழிற்சாலை களஞ்சியசாலையிலிருந்து 100 உர மூட்டைகள் திருடப்பட்டுள்ளன என, புத்தல பொலிஸார் தெரிவித்தனர்.

கரும்பு உற்பத்திக்காக குறித்த உர மூட்டைகள் சேமிக்கப்பட்டிருந்ததாகவும் களஞ்சியசாலையின் கதவை உடைத்து இந்தத் திருட்டு முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

50 கிலோ கிராம் 20 யூரியா உர மூட்டைகள், டீ.எஸ்.பி மற்றும் எம்.ஓ.பி உரமூட்டைகள் 80 இவ்வாறு திருடப்பட்டுள்ளன.

இவற்றின் சந்தைப் பெறுமதி 10 -15 இலட்சம் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.








வட்டவளை, டயரி பாற்பண்னை உற்பத்தி காரியாலய உத்தியோகத்தர் ஆசைத்தம்பி கிருஸ்ணகுமார், குறித்த நிறுவனத்திலிருந்து இடமாற்றம் பெற்றுச் செல்வதால், அவரின் சேவையைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தோட்ட மக்கள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டார்கள்.

(இரா. யோகேசன்)

சட்டவிரோத துப்பாக்கி வைத்திருந்தவருக்கு

# 10,000 ரூபாய் அபராதம்

■ எண்.ஆராச்சி

யட்டியாந்தோட்டை, வீஓயா பலைக்காட்டு இறப்பர் தோட்டமொன்றில், 12 போர வர்க்க துப்பாக்கியொன்றுடன் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் (28) அதிகாலை பொலிஸ் விசேட படையினரால் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் யட்டியாந்தோட்டை பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், குறித்த துப்பாக்கி பிரேஸில் நாட்டில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் 3 ரவைகளும் வெற்று ரவைகள் சிலவும் சந்தேக நபரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் ருவன்வெல்ல நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து, அவருக்கு 10,000 ரூபாய் அபராதப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

ஹங்குராகெத்த கல்வி வலயத்தில் இடம்பெற்ற

# நிதி மோடி அம்பலமானது

■ சேஹ்ரன் செனவிரத்ன

ஹங்குராகெத்த கல்வி வலயத்தில் 2012ஆம் ஆண்டு தொடக்கம் இடம்பெற்றதாகக் கூறப்படும் பாரியளவிலான நிதி மோசடி தொடர்பில், கணக்காய்வு பிரிவினரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதுவரை முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் 97 இலட்சம் ரூபாய் மோசடி இடம்பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளதென உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது கடமையிலிருக்கும் ஆசிரியர்கள், ஓய்வுப்பெற்ற ஆசிரியர்களின் கொடுப்பனவுகளைச் செலுத்தும் போது, வேறொரு நபரின் பெயரைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட வங்கி கணக்குகளில் நிதி வைப்பிலிப்பட்டு இந்த மோசடி முன்னெடுக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த மோசடியுடன் தொடர்புடைய கல்வி வலய அதிகாரி, 2016ஆம் ஆண்டு, வலப்பனை பிரதேச சபைக்கு மாற்றலாகிச் சென்றுள்ளதுடன், அரச சேவை ஆணைக்குழு ஊடாக வாராந்தம் இரண்டு நாள்களுக்கு ஹங்குராங்கெத்த கல்வி வலயத்தின் சம்பளம் தொடர்பான பிரிவுக்கு கடமைக்கு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர், அவரது மனைவியின் பெயரில் வங்கிக் கணக்கொன்றை உருவாக்கி அதில் 1.7 மில்லியன் ரூபாய் வைப்பிலிட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் மத்திய மாகாண கல்வி பணிப்பாளர் அமரசிறி பியதாஸவிடம் வினவியபோது, இந்த மோசடி தொடர்பில் தற்போது விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றார்.

# சந்திப்பு



■ பி.கேதீஸ்

ஆசிரியர் விடுதலை முன்னணியானது, திருகோணமலை வலய கல்வி பணிப்பாளரை சந்தித்து, அங்குள்ள அதிபர்,ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடியிருந்தது.

இதன்போது, ஆசிரியர் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் என்.டி.எஸ்.நாதன் உட்பட நிர்வாக குழு உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

மூடப்பட்டிருக்கும் ஹட்டன் ரயில் நிலைய ஓய்வு அறைகள்

# யாத்திரிகர்கள் சிரமம்



■ சுதத் எச்.எம்.ஹேவா

சிவனொளிபாதமலை யாத்திரை ஆரம்பித்துள்ள நிலையில், சிவனொளிபாதமலை செல்வதற்காக, ரயில் மூலம் ஹட்டன் ரயில் நிலையத்துக்கு வருகை தருபவர்கள், ஓய்வு எடுப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த ஓய்வு அறைகள் மூடப்பட்டுள்ளதால், யாத்திரிகர்கள் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

நாட்டின் பல பிரதேசங்களிலிருந்தும் பெருமளவானோர் சிவனொளிபாதமலை யாத்திரை செல்வதற்காக, ஹட்டன் ரயில் நிலையத்தை வந்தடையும் நிலையில், ஹட்டன் ரயில் நிலையத்தால் நிர்வகிக்கப்படும் ரயில் நிலையத்துக்கு அண்மித்த இடத்தில் அமைக்கப்பட்டுள்ள ஓய்வு அறைகள் பல மாதங்களாக மூடப்பட்டுள்ளதாக யாத்திரிகர்கள் குற்றஞ்சுமத்துகின்றனர்.

எனினும் இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த ஹட்டன் ரயில் நிலைய அதிபர் எம். தேவதாஸ், குறித்த ஓய்வு அறைகளில் திருத்தப் பணிகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அது நிறைவடையாமல், அந்த அறைகளை திறப்பது சிரமம் என தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில், ரயில் திணைக்களத்துக்கு அறிவித்துள்ளதாகவும் ரயில் திணைக்களத்தின் பராமரிப்பு பிரிவினர், இந்த ஓய்வு அறைகளின் திருத்தப் பணிகளை விரைவாக நிறைவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றார்.

குறைபாடுகளுடன் காணப்படும்

# நல்லாட்சியின் தனிவீட்டுத்திட்டம்

## இரண்டு வருடமாகியும் பயனாளிகளிடம் கையளிக்கப்படவில்லை

■ ஆ.ரமேஸ்

கந்தப்பளை, கோனப்பிட்டிய தோட்டத்திற்கு உட்பட்ட, கோனக்கலை தோட்டப்பிரிவில், இந்திய அரசு நிதி உதவியின் கீழ், நல்லாட்சி அரசாங்கத்தின் மலை நாட்டு புதிய கிராமங்கள் மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 42 தனி வீடுகள், பல குறைபாடுகளுடன் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய வீடுகளின், குடிநீர் வசதிகளுக்காக தாங்கிகள் பொருத்தப்பட்டு,



நீர்க் குழாய்கள் பொருத்தப்பட்ட போதிலும் இதுவரை நீர் விநியோகம் முன்னெடுக்கப்படவில்லை என்பதுடன், மின்சார வசதிகளும் வழங்கப்படவில்லை.

மேலும் இந்த வீட்டுத் திட்டத்துக்கு செல்வதற்கான வீதியும் உரிய முறையில் புனரமைக்கப்படவில்லை.

எனவே பல குறைபாடுகளுடன் குறித்த வீடுகள், இரண்டு வருடங்களை எட்டவுள்ள நிலையில், இவ் வீடுகள் பயனாளிகளுக்கு கையளிக்காது, வீடுகள் பற்றைக் காடுகளான மாறும் நிலை ஏற்பட்டுள்ளதாக பயனாளிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# விக்கிரகங்களின் திருட்டின் பின்புலத்தை ஆழமாய் ஆராயவேண்டும்

பல்லின சமூகங்கள், மதங்களைச் சேர்ந்தவர்கள் வாழும் நாட்டில் பேசுதல், நடந்துகொள்ளல் உள்ளிட்டவற்றை மிகக் கவனமாகக் கையாளவேண்டும். ஏனைய மதங்கள், அவர்களின் வாழ்வியல் நெறிகளைப் பற்றி ஓரளவுக்கேனும் தெரிந்துவைத்திருப்பது அவசியமாகும். அவ்வாறு தெரிந்திருந்தால் பிற மதங்களை நிந்திப்பதற்கு யாருமே முயலமாட்டார்கள். எமது நாட்டைப் பொறுத்தவரையிலும் இது முக்கியமானது.

ஆனால், ஒருவர் பின்பற்றும் மதத்தில் குறைகள் இருப்பதாகக் கூறிக்கொண்டு, மதமாற்றம் செய்யும் செயற்பாடுகள் தொடர்ந்துகொண்டேதான் இருக்கின்றன. இது ஓர் இனத்தின் இருப்பை கேள்விக்கு உட்படுத்திவிடும்.

அதேபோல, அந்த மதத்தின் மத சின்னங்களை அழித்தல், உடைத்தெறிதல், பிற மதங்களின் சிலைகளை, கொடிகளை கொண்டுவந்துவைத்தல் என்பதெல்லாம் கொஞ்சமேனும் ஜீரணிக்கமுடியாத செயல்களாகும். இதனூடாக, இனங்களுக்கு இடையில் மனக்கசப்புகளே ஏற்படும்.

திருகோணமலையில், பிள்ளையார் சிலைக்குமேல், புத்தர் சிலை வைக்கப்பட்டதே மிக அண்மையில் நடந்தேறிய சம்பவமாகும். அதேபோல, கடந்த நத்தார் தினத்தன்று புத்தளம் பிரதேசத்தில் கிறிஸ்தவ தேவாலயத்தின் உருவச்சிலை சேதமாக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மதமும், மனிதர்களை நல்வழிப்படுத்துவதையே போதிக்கின்றன. அதில் மாற்றுக்கருத்துகளுக்கு இடமில்லை. யார் வேண்டுமானாலும் எந்த மதத்தையும் பின்பற்றலாம். எமது நாட்டு, அரசியலமைப்பிலும் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையில், கோவில் உண்டியல்களை உடைத்து, களவெடுத்து செல்லுதல் மட்டுமன்றி, விலைமதிக்க முடியாத விக்கிரகங்களைத் திருடும் சம்பவங்களும் அதிகரித்துள்ளன. இது, மிகவும் அபாயகரமான சமிக்ஞையாகும். ஆகையால், விக்கிரகத் திருட்டு தொடர்பில், தீவிரமான விசாரணைகளை முன்னெடுத்து, அதன் பின்புலத்தைக் கண்டறிய வேண்டியது துறைக்குப் பொறுப்பானவர்களின் கடமையாகும்.

யாழ். மாவட்டத்திலுள்ள இந்து கோவில்களிலேயே விக்கிரகங்களை திருடிச்செல்லும் சம்பவங்கள் அண்மைய நாள்களில் அதிகரித்துள்ளன. ஆகையால்தான், விக்கிரகங்கள் திருடப்படுவதைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ். மாவட்ட கட்டளைத் தளபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். மாவட்டத்திலுள்ள இந்து கோவில்களில் திருடப்பட்ட விக்கிரகங்கள், கொழும்பில் விற்பனை செய்யப்பட்டமை கண்டறியப்பட்டு, அதில் பல விக்கிரகங்களும் மீட்கப்பட்டுள்ளன. அதுதொடர்பிலான விசாரணைகள் இன்னுமின்னும் துரிதப்படுத்தப்பட வேண்டும்.

மதச் சின்னங்களைத் திருடுதல், சேதப்படுத்துதல் போன்றவற்றின் ஊடாக, அந்த மதத்தைப் பின்பற்றுவோரின் மனங்களில் கீறல் ஏற்படும். இவ்வாறான, ஈனத்தனமான செயலை மாற்று மதங்களைச் சேர்ந்தவர்கள் செய்திருந்தால், அதுவே, மதங்களுக்கு இடையிலான முரண்பாடுகளுக்கு வித்திட்டுவிடும்.

ஆகையால், பல்லினங்கள், மதங்கள், கலாசாரங்களைக் கொண்டவர்கள் வாழும் இப்பூமியில், இனங்களுக்கு இடையில் குரோதங்கள் ஏற்படாதவகையில் வாழவேண்டுமாயின், அடுத்தவர் பின்பற்றும் மதங்களை எவ்வகையிலேனும் நிந்திக்கக்கூடாது என்பதே எமது தாழ்மையான கருத்தாகும்.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

அலைபாயும் நெஞ்சம் பல ஆசைகளைக் கோர்த்த வண்ணமாக இயங்குகின்றது. எந்த ஆசைகளும் நிரந்தரமாக இருப்பதில்லை.

எதிர்பார்த்த விடயங்களை, மிகவும் கஸ்டப்பட்டு கைப்பற்றியதும், காலப்போக்கில் ஆசைப்பட்ட விடயங்களைப் புறக்கணித்துவிட்டு, புதிதாக ஒன்று அல்லது பலவிடயங்களுக்குள் நுழைந்து கொள்கின்றார்கள். இதுவும் யாதார்த்தமான மாற்றமாகும்.

புதுவித எண்ணங்கள் பிறக்கும்போது, அதற்குள் தேவையற்ற விடயங்கள் இணைவதுண்டு. முழுமையான திருப்தி என்று மனிதனுக்கு இல்லை.

ஆசைகளைக் கடந்த உண்மை நிலையை அடைவதும் உணர்வதும் என்ற உயர்ந்த நிலையில், மாந்தர்களில் மிகக்குறைவானவர்களே இருக்கின்றார்கள். கட்டுக்குள் அடங்காத நெஞ்சம், அடிக்கடி நிலைமாறும். ஒருவன் முன்னேறுவது கட்டாயமானது. அது மிகவும் தேவையான ஆசை. ஆசை இல்லாமல் உலகம் எவ்வாறு இயங்கும்? ஆனால், அதில் நேர்மை இருக்கவேண்டும்.

பரந்த எண்ணம் கொண்டவர்கள், எந்த உயர் நிலையிலும் மனம் மாறமாட்டார்கள். தணியாத பேராசை ஆபத்தானது.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

# டெலோவின் சிறுபிள்ளை வேளாண்மை



புருஜோத்தமன் தங்கமயில்

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (டெலோ) ஏற்பாட்டில், தமிழ் பேசும் கட்சிகளுக்கு இடையில் மூன்று சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற போதிலும், இதுவரை எந்தவொரு பொது ஆவணத்திலும் கட்சித் தலைவர்கள் யாரும் கைச்சாத்திடவில்லை.

இந்தப் பத்தி எழுதப்படும் நாளன்று (நேற்று புதன்கிழமை) கட்சித் தலைவர்கள் பொது ஆவணத்தில் கைச்சாத்திடுவார்கள் என்று டெலோவின் பேச்சாளர் ஊடகங்களிடம் தெரிவித்திருந்தார். ஆனால், அதற்கான வாய்ப்புகளைக் கட்சித் தலைவர்கள் புறக்கணித்த நிலையே காணப்படுகின்றது.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பழனி திகாம்பரம், மனோ கணேசன் உள்ளிட்டவர்களுக்கு, மூன்றாவது சந்திப்பில் தயாரிக்கப்பட்ட பொது ஆவணத்தில் சில குறைகள் இருக்கின்ற நிலையில், அதில் கைச்சாத்திடுவதில் இருந்து அவர்கள் பின்வாங்கும் நிலையே காணப்பட்டது.

முஸ்லிம் காங்கிரஸின் ரவூப் ஹக்கீமும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ரிஷாட் பதியுதீனும் கூட, பொது ஆவணத்தில் கைச்சாத்திடும் எண்ணத்தோடு தற்போது இல்லை. ஏற்கெனவே, அவர்கள் இருவரும் தங்களது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களையே தங்களது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியாத நிலையில், தமிழ்த் தேசிய கட்சிகளின் அரசியல் கோரிக்கைகளை அங்கிகரிக்கும் பொது ஆவணத்தில் கைச்சாத்திட்டால், அது தமக்கு எதிரான நிலையை இன்னும் அதிகப்படுத்தும் என்று நினைக்கிறார்கள்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் அழுத்தங்களை, இலங்கைக்கு இந்தியா வழங்க வேண்டும் என்று கோரும் ஆவணத்தைத் தயாரிக்கும் நோக்கிலேயே, தமிழ்க் கட்சிகளுக்கு இடையிலான சந்திப்புகளை, டெலோ ஏற்பாடு செய்தது.

ஆனால், தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கான தீர்வை, 13ஆவது திருத்தத்துக்குள் சுருக்கும் மறைமுகமான திட்டங்களோடு, இந்தச் சந்திப்புகளை டெலோ நடத்துவதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இதனையடுத்து, தமிழரசுக் கட்சி முதல் இரண்டு சந்திப்புகளில் கலந்து கொள்ளவில்லை. மூன்றாவது சந்திப்பில் தமிழரசுக் கட்சி கலந்து கொண்ட போதிலும், டெலோ தயாரித்த ஆவணத்தை ஏற்றுக்கொள்வதில்லை என்பதில் உறுதியாக இருந்தது. அதனால், 13ஆவது திருத்தத்தைப் பிரதானப்படுத்திய பொது ஆவணம் மாற்றத்துக்கு உள்ளாகியது.

அது, தமிழ் மக்களின் அரசியல் தீர்வு, இலங்கை - இந்திய ஒப்பந்தங்களைப் பிரதானப்படுத்திய ஆவணமாகத் தயாரிக்கும் நிலை ஏற்பட்டது. அப்படிப்பட்ட ஆவணம், மூன்றாவது பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் தயாரிக்கப்பட்ட போதுதான், பிரச்சினைகள் எழுந்தன.

தமிழ்த் தேசிய கட்சிகளைப் பொறுத்தளவில், 13ஆவது திருத்தச் சட்டத்தைப் பிரதானப்படுத்திய ஆவணங்களில் கைச்சாத்திடுவது என்பது, பாரிய பின்னடைவான செயற்பாடு. அதைச் செய்வதற்கு, அநேக கட்சிகள் துணியமாட்டா.

ஆனால், முஸ்லிம் கட்சிகளுக்கும் வடக்கு - கிழக்குக்கு வெளியே இயங்கும் தமிழ்க் கட்சிகளுக்கும், 13ஆவது திருத்தச் சட்டத்தை பிரதானப்படுத்திய ஆவணத்தில் கைச்சாத்திடுவதில் பிரச்சினையில்லை. ஆனால், அதைத் தாண்டிய நிலையில், தமிழ்த் தரப்பின் அரசியல் கோரிக்கைகள் வலுப்பெறும் ஆவணத்தில் கைச்சாத்திடுவது என்பது, சிக்கல்களை உருவாக்கும்.

குறிப்பாக, 'தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகம் வடக்கு - கிழக்கு' என்று வலியுறுத்தும் ஆவணத்தில், முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் கைச்சாத்திடுவதற்கு பின்னடிப்பார்கள். ஏனெனில், வடக்கு - கிழக்கு இணைப்பையே, அவர்கள் தொடர்ச்சியாக எதிர்த்து வந்திருக்கிறார்கள்.

வடக்கு-கிழக்கு இணைக்கப்பட்டு, ஒரு நிர்வாக அலகாக மாறுமாக இருந்தால், அங்கு தாங்கள் எண்ணிக்கை அடிப்படையில் சிறுபான்மையினராக இருக்க வேண்டிவரும்; அது, ஆட்சி அதிகாரத்தை அடைவதற்குத் தடையாக இருக்கும் என்பது அவர்களின் நிலைப்பாடு.

வடக்கு, கிழக்குக்குள் தனித்த முஸ்லிம் அலகு பற்றிய கோரிக்கைகளைத் தமிழ்த் தரப்புகள் அங்கிகரித்தாலும், கடந்த கால கசப்புணர்வுகள் வடக்கு, கிழக்கு இணைவைத் தடுக்கவே செய்யும்.

அப்படியான நிலையில், தமிழர் தாயகத்தைப் பிரதானப்படுத்திய அரசியல் தீர்வு பற்றிய கோரிக்கைகளை வலியுறுத்தும் ஆவணத்தில், ஹக்கீமாலும் ரிஷாட்டாலும் கைச்சாத்திட முடியாது.

இந்தப் புரிதல், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கும் தமிழரசுக் கட்சியின் தலைவர்களுக்கும் உண்டு. அப்படியான நிலையில், டெலோவின் ஏற்பாட்டில் பொது ஆவணமொன்று தயாரிக்கப்படுவது, கிட்டத்தட்ட தடைப்படும். அதன்மூலம், தங்களைத் தாண்டிய பாய்ச்சலை எடுக்க நினைத்த டெலோவுக்கு, பாடம் புகட்டியதாக சம்பந்தனும் தமிழரசுக் கட்சியின் தலைவர்களும் நினைக்கிறார்கள்.

தமிழ் பேசும் கட்சிகளை ஒருங்கிணைத்து, பொதுக் கோரிக்கைகள் அடங்கிய ஆவணத்தைத் தயாரிப்பது என்பது நல்ல முயற்சி. ஆனால், அதற்கு தெளிவான சிந்தனையும் திறனும் வேண்டும். அனைத்துத் தரப்புகளினதும் அரசியல் உரித்துகள், அபிவிருத்தி நோக்கு, சமூக நிலை உள்ளிட்டவற்றைப் பிரதானப்படுத்தியதாக இருக்க வேண்டும்.

ஆனால், டெலோ ஆரம்பித்த 13ஆவது திருத்தத்தை முன்னிறுத்திய 'ஓட்டம்' என்பது, இரண்டு காரணங்களுக்காக மாத்திரம் நிகழ்ந்தது. ஒன்று, தமிழ்த் தேசிய அரசியலில் குறிப்பாக, கூட்டமைப்புக்குள் தன்னுடைய அதிகார அளவை அதிகரிப்பது. இரண்டாவது, இந்தியாவின் நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பது; அல்லது, இந்தியாவை மகிழ்விப்பது.

அதனால்தான், 13ஆவது திருத்தத்தை முன்னிறுத்திய சந்திப்புகளில் ஆரம்பத்தில் இருந்து மனோ கணேசனையும் ரவூப் ஹக்கீமையும் அழைத்துவர முடிந்த டெலோவால், தங்களின் பங்காளிக் கட்சியான தமிழரசுக் கட்சியையோ, இன்னொரு தமிழ்த் தேசிய கட்சியான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியையோ பங்கெடுக்க வைக்க முடியவில்லை.

மூன்றாவது சந்திப்பில், தமிழரசுக் கட்சி பங்கெடுத்த போதிலும், அந்தச் சந்திப்புக்கு முன்னரேயே, டெலோ தயாரித்துள்ள ஆவணத்தில் கைச்சாத்திட மாட்டோம் என்று அறிவித்துவிட்டே சென்றார்கள். அது மாத்திரமல்லாது, தாங்கள் ஆவணமொன்றைத் தயாரித்துக் கொண்டே சென்றார்கள்.

மூன்றாவது சந்திப்பில் தயாரிக்கப்பட்ட ஆவணம், தமிழரசுக் கட்சியின் அதிக தலையீடுகளுடன் தயாரிக்கப்பட்ட ஆவணமாக மாறியது. டெலோ தயாரித்த ஆவணத்தின் முக்கிய சரத்துகள் அனைத்தும் நீக்கப்பட்டு, தமிழர் அரசியல் பிரச்சினைகளின் வரலாறு அடங்கிய சில பத்திகள் மாத்திரமே சேர்க்கப்பட்டன. இதனால், 13ஆவது திருத்தத்தை முன்னிறுத்தி சேர்ந்தவர்கள், பிரச்சினைகளைச் சந்திக்க ஆரம்பித்தார்கள். அதுதான், பொது ஆவணத்தில் கட்சித் தலைவர்களைக் கைச்சாத்திட வைக்க முடியாமைக்கான காரணமாகும்.

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தக் கோரும் ஆவணத்தில் கைச்சாத்திடுவதால், மனோ கணேசனுக்கும் ஹக்கீமுக்கும் பிரச்சினையில்லை. அது, அவர்கள் சார்ந்த சமூகத்தை பெரியளவில் பாதிக்கவும் செய்யாது. அதனால்த்தான், அவர்கள் இருவரும் டெலோவின் முயற்சிகளுக்கு ஆதரவளித்தார்கள். டெலோவுக்காக சம்பந்தனிடம் தூதும் சென்றார்கள்.

ஆனால், 13ஆவது திருத்தம் பற்றிய கோரிக்கை இரண்டாம் நிலைக்கு சென்றதும் ஹக்கீம், மனோ கணேசனின் நிலைப்பாடுகளும் மாற்றங்களைக் கண்டன. அது, இயல்பானது. ஏனெனில், அவர்கள் தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் சமூகங்களின் எண்ணங்களைப் பிரதிபலித்தாக இருக்க வேண்டும்.

டெலோ, உண்மையிலேயே ஆக்கபூர்வமான விடயமொன்றை முன்னெடுக்க நினைத்திருந்தால், முதலில் தமிழர் தரப்புகளுடன் உரையாடியிருக்க வேண்டும். அதிலும் கூட்டமைப்புக்குள் விடயத்தை முன்வைத்து உரையாடி, அடுத்த கட்டத்தில் ஏனைய தமிழ்த் தேசிய கட்சிகளிடம் பேசியிருக்கலாம். அதன் அடைவு மட்டம் சார்ந்து, ஏனைய தமிழ்ச் சமூகங்களின் பிரதிநிதிகளையும் உள்வாங்கும் செயற்றிட்டம், அவர்களின் கோரிக்கைகளையும் உள்வாங்கி முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டும். அதற்கு எவ்வளவு காலம் எடுத்தாலும், அதுதான் பூரணமான செயற்பாடாக அமையும்.

அதற்கு மாறாக, தங்களை முன்னிறுத்துவதற்காக பொது ஆவணமொன்றைத் தயாரிக்க முனைந்த டெலோ, மீண்டும் நட்பு சக்திகளாகத் திகழும் தமிழ் பேசும் கட்சிகளுக்கு இடையில், இடைவெளியை அதிகரிக்கும் செயற்றிட்டங்களைச் செய்திருக்கின்றது. இதனை ஆர்வக்கோளாறுகளால் நிகழ்ந்ததாக நினைத்து கடந்துவிட முடியாது. மாறாக, அரசியல் சிந்தனையற்ற செயற்பாட்டால் ஏற்பட்ட ஒன்றாகக் கொள்ளப்பட வேண்டும்.

## கடிதங்கள்

### கவனிப்பாரற்ற நிலையில்

## சேருவில சிறுவர் பூங்காவனம்



திருகோணமலை மாவட்டத்தின் சேருவில பிரதேச சபைக்கு உட்பட்ட சிறுவர் பூங்கா, கவனிப்பாரற்றுக் காணப்படுவதால், அடர்த்தியான பற்றைக்காடுகள் வளர்ந்து காணப்படுகின்றது. இதனால், சிறுவர்கள் மாலை வேளைகளில் விளையாட முடியாத நிலையில் தவிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொவிட்-19 காரணமாக, சேருவில சிறுவர் பூங்கா வருடக் கணக்கில் மூடப்பட்டதால், புற்புதிகள், பற்றைக்காடுகள் வளர்ந்து காணப்படுவதால் உட்பிரவேசிக்க முடியாத நிலையுள்ளது.

சேருவில பிரதேச சபையால் பராமரிக்கப்பட்டு வரும் இச்சிறுவர் பூங்கா வனம், இன்னமும் திறக்கப்படாது இருப்பதால், இங்குள்ள சிறுவர்கள் ஏறி விளையாடக்கூடிய பெறுமதியான பொருட்கள் துருப்பிடித்து, பயன்படுத்த முடியாத நிலையை அடைவதற்கு முன்னர், சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டு, அப்பகுதி சிறுவர்கள் விளையாடுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

சேருவில பிரதேசத்தை அண்டிய தோப்பூர், வெருகல் போன்ற பகுதிகளில் சிறுவர் பூங்காக்கள் இல்லாது காணப்படுகின்றன. சேருவிலவில் சிறுவர் பூங்கா இருந்தும் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுவதாகவும் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, இதுகுறித்து சிந்தித்து செயற்படுவதற்கு, ஆர்வமுடையோர் முன்வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

-எப். முபாரக்

கனடா அனுப்புவதாக ரூ. 1.65 கோடி மோசடி:

புதுச்சேரி

# இலங்கை தமிழர் உட்பட ஆறுபேர் மீது வலைவீச்சு

புதுச்சேரி, பாலதண்டாயுதம் வீதியைச் சேர்ந்தவர் ஸ்டீபன் நித்தியானந்தம் (வயது - 57) திருக்கனூரில் மத போதகராக உள்ளார். கோயம்புத்தூர் வடவள்ளி, 3வது குறுக்கு தெருவில் வசிப்பவர், இலங்கையைச் சேர்ந்த ரமணி. இவர், கனடா நாட்டில் தொண்டு நிறுவனம் (என்.ஜி.ஓ) நடத்தி வருவதாகவும், ஏழை மக்களை கனடாவுக்கு அனுப்புவதாகவும் நித்யானந்தத்திடமும் அவரது நண்பன் ஜான்சனிடமும் கூறினார்.

இதற்கு ஒரு நபருக்கு ரூ. 10 லட்சம் செலவாகும். முதற்கட்டமாக ரூ. 1 லட்சம் வழங்க வேண்டும். மீதி பணம் கனடா நாட்டுக்குச் சென்ற பின்பு, அங்கு வேலை செய்யும்போது மாத சம்பளத்தில் பிடித்தம் செய்து கொள்வர் எனவும் கூறினார்.

இதை நம்பிய ஸ்டீபனும் சேர்ச்சில் உள்ள 14 பேரும் தலா ரூ. 1 லட்சம் பணத்தை என்.ஜி.ஓ பணியாளரான அடையாறு மத போதகர் சைமன் ஜோஸ்வாவிடம் கொடுத்தனர். கனடாவுக்கு செல்வது எப்படி என ஒரு கூட்டம் நடத்தினர். அதில் பங்கேற்ற 165 பேர் கனடா செல்ல விருப்பம் தெரிவித்தனர். கனடா செல்ல விரும்பியவர்கள், ரூ.1.65 கோடியை, சென்னையில் வசிக்கும் இலங்கை தமிழர் நிக்கோலஸ் செல்வக்குமார், ரமணி மகள் கிருஷ்யாணி, திருச்சியை சேர்ந்த டிரைவர் தமிழ்செல்வன் ஆகியோரது வங்கிக் கணக்கில் செலுத்தினர். ஆனால் கனடா நாட்டுக்கு யாரையும் அனுப்பவில்லை. தாங்கள் ஏமாற்றப்பட்டதை உணர்ந்து, பணத்தை பெற்றுத் தருமாறு நித்தியானந்தத்திடம் கேட்டனர். அவர், ஜான்சனிடம் கேட்டபோது, சரியான பதில் கூறவில்லை. இது தொடர்பாக நித்தியானந்தம் சி.பி. சி.ஐ.டி. பொலிஸில் புகார் அளித்தார். அதன்பேரில், பண மோசடியில் ஈடுபட்ட இலங்கை தமிழர்கள் ரமணி, நிக்கோலஸ் செல்வகுமார், கிருஷ்யாணி, மத போதகர் ஜான்சன், சைமன் ஜோஸ்வா, டிரைவர் தமிழ்செல்வன் ஆகியோர் மீது, பொலிஸார் வழக்கு பதிந்து, தேடி வருகின்றனர்.

குடகு

## உண்டியலில் ஆணுறை

கோவில் உண்டியலில், பயன்படுத்திய ஆணுறையை போட்ட நபர்களைக் கைது செய்ய வேண்டும் என, இந்து அமைப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மங்களூர் என்ற இடத்தில், கொரகஜ்ஜா கோவில் உள்ளது. இந்தக் கோவில் உண்டியலில், பயன்படுத்திய ஆணுறைகளைச் சிலர் போட்டு உள்ளனர்.

இது குறித்து பொலிஸில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. உண்டியலில் ஆணுறையை போட்ட நபர்களை கண்டுபிடித்து கைது செய்ய வேண்டும் என, விஷ்வ ஹிந்து பரிஷத் அமைப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பனாஜி

## கோவாவில் ரொனால்டோவின் சிலை




கோவா மாநிலம் பனாஜியில், கிறிஸ்டியானோ ரொனால்டோவின் பிரமாண்ட சிலை நேற்று (29) திறந்துவைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து, கோவா மாநில மந்திரி மைக்கேல் லோபோ கூறுகையில், “இளைஞர்களுக்கு உத்வேகம் அளிக்கும் விதமாகவும் கால்பந்தைாட்டத்தை கோவா மாநிலம், இந்தியாவில் அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்லும் விதமாகவும் இந்தச் சிலை நிறுவப்பட்டுள்ளது. நம்முடைய குழந்தைகள், இதுபோன்ற உலகளவிலான ஜாம்பவான்கள் போன்று வர வேண்டும் என விரும்புகிறோம்” என்றார்.

தார்வாட்

## தேள் கொட்டி வாலிபர் பலி

தேள் கொட்டியதற்கு சிகிச்சை பெறாமல் அலட்சியமாக இருந்த வாலிபர், உடலில் விஷம் பரவி உயிரிழந்தார்.

தார்வாட் மாவட்டம், எல்லப்பா (வயது- 38) பணியாற்றி கொண்டிருக்கும் போது நான்கு நாள்களுக்கு முன்னர் அவரை தேள் கொட்டியது. சிகிச்சை பெறாமல் அலட்சியமாக அப்படியே விட்டு விட்டார். திடீரென நேற்றுமுன்தினம் காலை உடல் முழுதும் விஷம் பரவி மயங்கி விழுந்தார். வாயில் நுரை கக்கி, பேச முடியாத நிலைக்கு தள்ளப்பட்டார். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

கோல்கட்டா

## மனைவியை கண்டுபிடித்தால் ரூ.5,000 பரிசு

வீட்டை விட்டு வெளியேறிய மனைவியை கண்டுபிடித்து தருவோருக்கு 5,000 ரூபாய் பரிசு வழங்குவதாக, மேற்கு வங்க மாநிலத்தைச் சேர்ந்த ஒருவர் அறிவித்து உள்ளார்.

பிங்கலா பகுதியைச் சேர்ந்த தச்சு வேலை செய்து வரும் ஒருவர், சமூக வலைதளத்தில் ஒரு பதிவை வெளியிட்டுள்ளார். அதில், தான், வேலைக்காக வெளியூர் சென்றிருந்தபோது வீட்டின் ஜன்னலை உடைத்து, தன் மனைவி, குழந்தையுடன் வெளியேறி விட்டதாகவும் அவர்களை கண்டுபிடிக்க உதவுவோருக்கு 5,000 ரூபாய் பரிசு தருவதாகவும் பதிவிட்டுள்ளார்.

புதுடெல்லி

## ‘அமேசான்’ நிறுவனத்துக்கு தடை?




விதிகளை மீறிச் செயல்படுவதால் ‘அமேசான்’, ‘பிளிப்கார்ட்’ உள்ளிட்ட மின்னணு வர்த்தக நிறுவனங்கள், இந்தியாவில் செயற்பட வழங்கப்பட்டுள்ள அனுமதியை இரத்து செய்ய வேண்டும் என, ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் கிளை அமைப்பான ‘எஸ்.ஜே.எம் ‘ எனப்படும் சுதேசி ஜாக்ரன் மஞ்ச் கோரிக்கை விடுத்துள்ளது.

2017- 18ஆம் ஆண்டிலிருந்து 2019 - 20 ஆண்டு வரை மட்டும் அமேசான் நிறுவனம் இந்தியாவில் சட்ட நடவடிக்கைகளுக்காக 9,788 கோடி ரூபாய் செலவழித்துள்ளதாக தன் வரவு - செலவு கணக்கில் காட்டியுள்ளது. ஆனால், இந்த பணம் இந்தியாவில் அதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுத்து, சட்டத்தை மீறுவதற்காக செலவழிக்கப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது. இதை எளிதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. இந்த நிறுவனங்களின் விதி மீறல்கள் பற்றி, சி.பி.ஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



புதுடெல்லி

## பிரதமர் மோடியின் புதிய கார்

பிரதமர் மோடி, அதிக பாதுகாப்பு அம்சங்கள் அடங்கிய, ‘மெர்சிடஸ் - மேபாக் எஸ் 650 கார்ட்’ என்ற காரை பயன்படுத்தத் தொடங்கியுள்ளார்.

குஜராத் முதலமைச்சராக மோடி இருந்த போது, குண்டு துளைக்காத ‘மஹிந்திரா ஸ்கார்பியோ’ காரை பயன்படுத்தி வந்தார். பின்னர், பி.எம்.டபிள்யு - 7 சீரிஸ், லாண்ட் ரோவர் ரேஞ் ரோவர் வோக், டொயோட்டா லாண்ட் க்ருசர்’ ஆகிய கார்களை பயன்படுத்தினார்.

மெர்சிடஸ் - மேபாக் எஸ் 650 கார்ட் காரில், 6 லிட்டர் இரட்டை டர்போ இன்ஜின் பொருத்தப்பட்டது. மணிக்கு 160 கி.மீ., வேகத்தில் செல்லும். 2 மீற்றர் தூரத்தில் இருந்து 15 கிலோ வெடிகுண்டு வீசினாலும் காரில் உள்ளவர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. ஒரு காரின் விலை 12 கோடி இந்திய ரூபாய்.

புதுடெல்லி

## இராணுவத்தினருக்கு கடும்குளிர் தாங்கும் பிரத்தியேக ஆடை






இந்தியாவின் எல்லை நாடுகளான பாகிஸ்தான், சீனா, திபெத் ஆகிய நாடுகளின் பெரும்பகுதி இமயமலை உச்சியில் அமைந்திருப்பதால், எல்லைப் பகுதியில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுவரும் இந்திய இராணுவ வீரர்கள், குளிர் காலத்தில் உயரமான இடத்தில் இருந்து சற்றுப் பின்வாங்கி வருவார்கள். அப்போது எதிரி நாட்டு படைகள் இந்திய எல்லைக்குள் ஊடுருவும் வாய்ப்புள்ளது.

இந்த நிலையில், இந்திய இராணுவத்துக்கு ஆயுதங்கள் தயாரித்துக் கொடுக்கும் ‘டி.ஆர்.டி.ஓ’, கடுங்குளிரில் இருந்து இராணுவ வீரர்களைக் காக்கும் வகையில் பிரத்தியேக ஆடையை வடிவமைத்துள்ளது. அந்தத் தொழில்நுட்பத்தை தற்போது இராணுவத்திடம் வழங்கியுள்ளது. இந்த ஆடை, 15 டிகிரியில் இருந்து மைனஸ் 50 வரையிலான கடுங்குளிரைத் தாங்கும் வகையிலான தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ளது.

## கோப்பிக்கன்று



உக்குவளை பிரதேச செயலாளர் பிரிவில், ஓவிலிகந்த வலயத்தில் மக்களின் பொருளாதாரத்தை மேற்படுத்தும் வகையில், அங்குவாழும் 125 குடும்பங்களுக்கு 7,500 கோப்பிக்கன்றுகள், ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹன திஸாநாயக்கவால் வழங்கப்பட்டது.

(படம்: மஹேஸ் கீர்த்தி)

## டிஜிட்டல் புகைப்படக் கண்காட்சி





பாகிஸ்தான் மின்னணு ஊடகங்கள் மற்றும் வெளியீடுகள் இயக்குநர் குழுமத்தால் முதல் தடவையாக குவாத் இ ஆசாமின் புகைப்படங்களின் டிஜிட்டல் புகைப்படக் கண்காட்சி பாகிஸ்தான்-சீனா நட்பு மையத்தில் திங்களன்று நடைபெற்றது.

பாகிஸ்தான் தகவல் மற்றும் ஒலிபரப்பு துறை மத்திய அமைச்சர் பவாத் அஹமத் சவுத்ரி, கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார். இந் நிகழ்வின் போது காட்சிப்படுத்தப்பட்ட பெரும்பாலான புகைப்படங்கள், பாகிஸ்தானுக்கான குவாத் இ ஆசாமின் போராட்டத்தின் காலகட்டம் மற்றும் அவர் கவர்னர் ஜெனரலாக இருந்த காலத்தை சேர்ந்தவையாகும்.

## வருடாந்த நிகழ்வு...



இலங்கை பாராளுமன்ற ஊழியர் சங்கம் ஏற்பாடு செய்த பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசப் புத்தகங்கள், புலமைப்பரிசில்களை வழங்கும் வருடாந்த நிகழ்வு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று முன்தினம் (28) பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது.

பாராளுமன்ற செயலகப் பணியாளர்களின் பிள்ளைகளில் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரண தரப் பரீட்சை, உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்று பல்கலைக்கழக அனுமதியைப் பெற்ற மாணவ மாணவியருக்குப் புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன. பாராளுமன்றத்தில் பணியாற்றும் 380 ஊழியர்களின் 550 பிள்ளைகளுக்கான அப்பியாசப் புத்தகங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், தற்போதைய கொவிட்-19 ஒழுங்குவிதிகளுக்கு அமைய இந்த நிகழ்வு அடையாள நிகழ்வாக முன்னெடுக்கப்பட்டது.

## இலவச மூக்குக் கண்ணாடிகள்...





மாற்றுத் திறனாளிகளை வலுவூட்டும் ‘சுபீட்சத்தின் அபிவிருத்தி’ வேலைத் திட்டத்தின் கீழ் கம்பஹா மாவட்ட, திவுலப்பிட்டிய தேர்தல் தொகுதியில் பார்வை குறைபாடுடைய 1,000 பேருக்கு இலவச மூக்குக் கண்ணாடி வழங்கி வைக்கப்பட்டது.

கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் இந்திக அநுருத்த தலைமையில் திவுலப்பிட்டிய, மரதகஹமுல்ல ஆனந்தா ஆரம்பக் கல்லூரியில் இந்நிகழ்வு நடைபெற்றது.



## ஐ.நா அமைதிப் படைக்கு...

ஐ.நா அமைதி காக்கும் பணிகளுக்காக சூடான் நோக்கி 8ஆம் கட்ட குழு, கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து சூடான் நோக்கி டிசெம்பர் 29 காலை புறப்பட்டுச் சென்றது. அக்குழுவில் 11 அதிகாரிகள் மற்றும் 22 படையினர் அடங்கியுள்ளனர்.







இஸ்ரேல்

பறவைக் காய்ச்சலால்

# 5000 கொக்குகள் பலி



வடக்கு இஸ்ரேலின் ஹுலா பள்ளத்தாக்கில் பறவைக் காய்ச்சல் பாதிப்பால் சுமார் 5,000 க்கும் மேற்பட்ட கொக்குகள் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வோர் ஆண்டும் குளிர்காலத்தில் ஆபிரிக்காவுக்கு செல்லும் பறவைகள், ஹுலா பள்ளத்தாக்கில் உள்ள நீர்நிலைகளில் தங்கிச் செல்வது வழக்கம் எனவும் அந்த வகையில், இம்முறை சுமார் 30,000 கொக்குகள் தங்கியிருந்ததாகவும் அவற்றில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கொக்குகள் உயிரிழந்துவிட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், இது வரலாற்றிலேயே மிக மோசமான வன உயிரின பேரழிவு எனத் தெரிவித்துள்ள அதிகாரிகள், பறவைக் காய்ச்சல் பரவலைத் தடுக்கும் விதமாக ஆயிரக் கணக்கான கோழிகளையும் கொல்ல உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் உயிரிழந்த கொக்குகளை, கழுகு உள்ளிட்ட பறவைகள் உண்டால் பறவைக் காய்ச்சல் மேலும் அதிகரிக்க வாய்ப்பிருப்பதால், பறவைகளை அகற்றும் பணி பாதுகாப்பாக நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனா

# சீனாவில் புதிய சாதனை

சீனாவில் மேற்கு - கிழக்கு பகுதிகளுக்கு இடையே சுமார் 20 ஆயிரம் கிலோ மீற்றர் தூரத்திற்கு இயற்கை எரிவாயுவை, குழாய் மூலம் எடுத்துச் செல்வதில் புதிய சாதனை படைக்கப்பட்டுள்ளது.

அதாவது, 2021ஆம் ஆண்டில் 100 பில்லியன் கியூபிக் மீற்றர் அளவுக்கு, இயற்கை எரிவாயு கொண்டுச் செல்லப்பட்டுள்ளது. இது சீனாவின் ஓர் ஆண்டுக்கான பயன்பாட்டில் 27 சதவீதம் ஆகும்.

2002 ஆம் ஆண்டு, அந்நாட்டின் மேற்கு - கிழக்கு பகுதிகளுக்கு இடையிலான இயற்கை எரிவாயு குழாய்த் திட்டம் தொடங்கப்பட்டு, பின்னர் அது கடந்த 20 ஆண்டுகளாக படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டது.

தற்போது இது, உலகின் மிகப்பெரிய இயற்கை எரிவாயு குழாய்த் திட்டமாகத் திகழ்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.



அயர்லாந்து

# படுக்கை அறைக்குள் வேற்றுக் கிரகவாசி



நபர் ஒருவர் தனது வீட்டின் படுக்கையறையில் வேற்றுக்கிரக வாசிகளைப் பார்த்ததாகப் பொலிஸாரிடம் புகார் அளித்த சம்பவம், அயர்லாந்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அயர்லாந்தில் இவ்வாண்டில் மட்டும் பறக்கும் தட்டுகள், விசித்திரமான ஒளி, வேற்றுக்கிரகவாசிகளைப் பார்த்ததாக எட்டு விநோத வழக்குகள் பதிவாகியுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில், அண்மையில் நபர் ஒருவர், தனது படுக்கையறையில் வேற்றுக்கிரகவாசிகளைப் பார்த்ததாகப் பொலிஸாருக்குப் புகார் அளித்திருந்தார்.

இச்சம்பவமானது அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தபோதும் இது குறித்த போதிய ஆதாரமின்மையால் இவ் விடயம் எவ்வித சர்வதேச ஊடகங்களிலும் பேசப்படவில்லை.

இந்நிலையில் இது குறித்துக் கருத்துத் தெரிவித்த அந்நாட்டுப் பொலிஸார், “சிலர் கவனத்தை ஈர்ப்பதற்காக இவ்வாறு வழக்குகளைப் பதிவு செய்கின்றனர்” என்றனர்.

ஜோர்டான்

# பாராளுமன்றில் கைகலப்பில் ஈடுபட்ட எம்.பிக்கள்



ஜோர்டான் பாராளுமன்றத்தில் எம்.பிக்களுக்கு இடையே ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பாக மாறி, ஒருவரையொருவர் தாக்கிக் கொண்ட சம்பவம் அந்நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தலைநகர் அம்மானில் அண்மையில் நடைபெற்ற பாராளுமன்ற கூட்டத்தொடரில், அரசியலமைப்பில் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் மீதான விவாதத்தின் போது, தேவையற்ற கருத்துகளுக்காக உறுப்பினர் மன்னிப்பு கேட்க மறுத்ததால், ஏற்பட்ட வாக்குவாதம் சிறிது நேரத்தில் கைகலப்பாக மாறியது.

இதன்போது ஒருவரையொருவர் மாறி மாறித் தாக்கிக் கொண்டதால் அவையில் பதற்றம் நிலவியது. இது குறித்து பேசிய எம்.பி கலீல் அத்தியே, “இந்த நடத்தை மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாதது. நாட்டின் நற்பெயருக்கு தீங்கு விளைவிக்கும்” என்று தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இது குறித்து வெளியான காணொளியானது இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சூடான்

தங்கச் சுரங்க விபத்தில்

# 38 பேர் உயிரிழப்பு



சூடானில் உள்ள தங்க சுரங்கமொன்றில் ஏற்பட்ட விபத்தில் சிக்கி 38 பேர் உயிரிழந்துள்ள சம்பவம் அந்நாட்டில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சூடானின் தலைநகரான கார்டோமின் மேற்குப் பகுதியில் உள்ள மூடப்பட்டிருந்த தங்க சுரங்கத்தில், அப்பகுதி மக்கள் தங்கம் எடுக்கும் பணியில் ஈடுபட்ட போது, அச் சுரங்கத்தின் மேற்கூரை இடிந்து விழுந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதில் பலர் சிக்கிக் கொண்ட நிலையில் தகவலறிந்து அங்கு வந்த மீட்புக் குழுவினர் சுரங்கத்தில் சிக்கிக் கொண்டவர்களை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டதாகவும், இதன்போது சுமார் 38 பேரின் உடல்கள் மீட்கப்பட்டதாகவும் பலர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுள்ளது.

இந்நிலையில், இவ் விபத்து தொடர்பாக விசாரணை நடைபெற்று வருவதாக அந்நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிரித்தானியா

விமானத்தின் கண்ணாடி

# நடுவானில் வெடித்தது

பிரித்தானியாவில் 200 பயணிகளைக் கொண்ட விமானமொன்று சுமார் 35,000 அடி உயரத்தில் பறந்துகொண்டிருந்தபோது, அதன் கண்ணாடி வெடித்த சம்பவம் அந்நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 25 ஆம் திகதி லண்டனிலிருந்து கோஸ்டாரிகா நாட்டில் உள்ள சான் ஜோஸ் நகருக்குச் சென்ற விமானத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவ தினத்தன்று குறித்த விமானம் 35,000 அடி உயரத்தில் பறந்துகொண்டிருந்தபோது, அதற்கு மேலாகப் பறந்த மற்றொரு விமானத்திலிருந்து விழுந்த பனிக் கட்டிக் குவியலொன்று குறித்த விமானத்தின் முன்புற கண்ணாடியில் விழுந்ததில் அக்கண்ணாடியில் பலத்த விரிசல் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

எனினும் சிறப்பாகச் செயற்பட்ட அவ்விமானத்தின் விமானி, உடனடியாக விசான் ஜோஸ் நகரில் விமானத்தைப் பத்திரமாக தரையிறக்கியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் குறித்த விமானத்தில் பயணித்த பயணிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.





இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# லெய்செஸ்டரிடம் தோற்ற லிவர்பூல்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் தொடரில், லெய்செஸ்டர் சிற்றியின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் தோற்றது.

லெய்செஸ்டர் சார்பாகப் பெறப்பட்ட கோலை அடெமோலா லுக்மன் பெற்றிருந்தார்.

இதேவேளை, செளதாம்டனின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணிக்கும், டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பருக்குமிடையிலான போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது. செளதாம்டன் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜேம்ஸ் வோர்ட் பெளஸும், டொட்டென்ஹாம் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஹரி கேனும் பெற்றனர்.

அந்தவகையில், பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 47 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி காணப்படுகின்றது. தலா 41 புள்ளிகளைப் பெற்றுள்ளபோதும் கோலெண்ணிக்கை வித்தியாசத்தில் இரண்டாம், மூன்றாமிடங்களில் லிவர்பூலும், செல்சியும் காணப்படுகின்றன.

# சிநேகபூர்வ போட்டியில் வென்ற போல்டன்

எம்.யூ.எம். சனூன்)

புத்தளம் லிவர்பூல் கால்ப்பந்தாட்ட அணிக்கும், போல்டன் கால்பந்தாட்ட அணிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான கால்பந்தாட்டப் போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் போல்டன் வென்றது.

கொரோனா வைரஸ் நீண்ட கால விடுமுறைக்கு பின்னரான இப்போட்டியானது, புத்தளம் சாஹிரா தேசிய கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

போல்டன் சார்பாக, எம். துபைல், ஏ.எம். ரிஹ்சான் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, லிவர்பூல் சார்பாகப் பெற்ற கோலை எம்.எம். முப்தாஸ் பெற்றார்.

இப்போட்டிக்கு மத்தியஸ்தர்களாக, எம்.எஸ்.எம். நெளபி, ஏ.ஓ.எம். அசாம், எம். எஸ்.எம். அஸ்பான் ஆகியோர் கடமையாற்றினர்.





# பங்கபந்துத் தொடரில் சம்பியனான இலங்கை

என். ஜெயரட்ணம்



பங்கபந்து ஆசிய மத்திய வலய ஆண்களுக்கான கரப்பந்தாட்ட சவால் கிண்ணத் தொடரில் இலங்கை சம்பியனானது.

பங்களாதேஷில் நடைபெற்றுவந்த இத்தொடரில், மிர்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற பங்களாதேஷுடனான இறுதிப் போட்டியில் 28-26, 25-20, 25-20 என்ற நேர் செட்களில் வென்று இலங்கை சம்பியனாகியிருந்தது.

# காரைதீவு விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டம்




கிழக்கின் பழம்பெரும் கழகமாம் காரைதீவு விளையாட்டுக்கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டமானது, கழகத் தலைமையகத்தில் கழகத் தலைவர் கி. சசிகரபவான் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

அதிதிகளாக, கழகப் போசகர்களான உத்தரவு பெற்ற நில அளவையாளர் வே. இராஜேந்திரன், உதவிக் கல்விப்பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா ஆகியோர் மாலை சூட்டி வரவேற்கப்பட்டனர்.

கழகச் செயலாளர் வெ. உதயகுமரன் ஆண்டறிக்கையை சமர்ப்பிக்க, நிதிச் செயலாளர் என். சுபதீபன் கடந்தகால நிதி அறிக்கையை சமர்ப்பித்தார்.

இதன்போது 2022ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. புதிய தலைவராக வெ. அருட்குமரன், செயலாளராக எஸ். கிருஷாந்த், பொருளாளராக எ. பிரேமானந்த் உள்ளிட்ட புதிய நிர்வாகம் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் வியாழக்கிழமை, 30 டிசெம்பர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.